கோகுலம்

குழந்தைகள் பத்திரிகை

மாதம் இருமுறை

30-9-1973

40 காசு



நீங்கள் செய்வது எதுவானாலும் சரி, பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட் அதை சிறந்த முறையில் செய்ய உதவுகிறது.



பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட் ஒரு 100 வாட் பல்பினைப் போல் இருபங்கு ஒளி தருகிறது. இருப்பினும் இதற்கு ஒரு 40 வாட் பல்புக்கான அளவு மின்சாரமே தேவைப்படுகிறது. பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட் பொருத்தி மின்சாரத்தை மிச்சப்படுத்துங்கள்.
தரம் மற்றும் உழைப்பு இவ்விஷயத்தில் பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட்டே வாங்குவதற்குச் சிறந்ததாகும்.
கச்சிதமான பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட் யூனிட் தரமான உறுப்புகளுடன் முன்கூட்டியே ஒயர் செய்யப்பட்டதாகும். பொருத்துவதற்கு எளிதானது. உபயோகிப்பதற்கு சிக்கனமானது. வேலைகளை சிறந்த முறையில் செய்ய இது உதவுகிறது—உங்கள் கடையிலும் சரி, வீட்டிலும் சரி.


அரைப்பங்கு செலவில் இருபங்கு ஒளி!

சிறந்த ஒரு லாம்ப் வேண்டுமா?
அதை முதலில் அளிப்பது பிலிப்ஸ்

பிலிப்ஸ்

பிலிப்ஸ் இந்தியா லிமிடெட்

PHILIPS



கோகுலம்

மலர் 2 : இதழ் 13

செப்டம்பர் 30, 1973

பிரமாதீச, புரட்டாசி 14

உயிர்களிடத்து அன்பு
வேண்டும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல்
வேண்டும்


— பாரதியார்

நவராத்திரி இங்கே இப்படி:
ஜப்பானில் எப்படி ?''— உள்ளே !

வண்ணப்படம் : உதயபாஸ்கர்



குல்லாக் குரங்கு – 13



சந்தா விவரம் :

உள் நாடு :

ஒரு வருஷம் ... ரூ. 10-00

ஆறு மாதம் ... ரூ. 5-00

இலங்கை :

ஆண்டுச் சந்தா : ரூ. 15-00

(இலங்கை நாணயப்படி)

இதர நாடுகள் :


ஆண்டுச் சந்தா ரூ. 25-00

★

மானேஜர், கோகுலம்

கல்கிப் பூங்கா, சென்னை-600032

பிள்ளையார் பெருமை



திருமுருக கிருபானந்தவாரியார்

விநாயகர் பாரதம் எழுதியது

ஓத வினையகலும் ஓங்குபுகழ் பெருகும்
காதல் பொருள் அனைத்தும் கைகூடும் - சீதப்
பனிக்கோட்டு மால்வரை மேல் பாரதப்
போர் தீட்டும்
தனிக்கோட்டு வாரணத்தின் தாள்.

- பெருந்தேவனார்.

வேத வியாசர் இமாசலத்தில் மூன்று ஆண்டுகள் உலகை மறந்து ஒருமைப் பட்ட உள்ளத்துடன் யோக நிலையில் இருந்தார். அப்போது அவருடைய மனக் கண் முன் பாரத வரலாறு தோன்றியது.

பிரமதேவர் அவர்முன் தோன்றி, ''வியாச முனிவனே! உலகம் உய்ய இம்மகாபாரதத்தை நீ பாடுவாயாக'' என்று பணித்தருளினார்.

வியாசர் பிரமதேவரை வணங்கி, ''பாடுகின்றவனே எழுதினால் பாடுகின்ற வேகம் தடைப்படும். எழுதுதற்கு அறிவுள்ள ஒருவன் வேண்டும்'' என்றார். நான்முகக் கடவுள், ''அன்ப! ஞானமே வடிவாகிய விநாயகமூர்த்தி ஒருவர் தான் பாரதத்தை எழுதும் பேராற்றல் படைத்தவர். அவரை வழிபட்டு அவரைக் கொண்டு எழுதச் செய்'' என்று கூறி மறைந்தார்.

வியாச முனிவர் விநாயகப் பெருமானை மனம் உருகி வழிபாடு செய்தார். ஆனைமுகத்து அண்ணல் அவர் முன் தோன்றியருளினார்.

வியாசர் விநாயகரைத் தரிசித்து, உடல் துளக்கமுற்று, விழிநீர் பெருக, உள்ளம் உருகப் பல முறை பணிந்து எழுந்தார்.

விநாயகமூர்த்தி, ''வியாசனே! உனக்கு என்ன வரம் வேண்டும்?'' என்றார்.

வியாசர், ''கருணையங்கடலே! அடியேன் மகாபாரதம் என்ற இதிகாசத்தைச் செய்யுள் வடிவில் பாடப் போகின்றேன். இதனைத் தேவரீர் மேரு மலையில் எழுதியருள வேண்டும்'' என்றார்.

விநாயகர், ''முனிபுங்கவனே! பார
த்தைப் புதிதாகப் பாடப் போகின்
றனையா? பாடியதைச் சொல்ல
போகின்றனையா?'' என்று வினவினார்

வியாசர், ''அப்பனே! புதிதாக
தான் பாடப் போகின்றேன்'' என்றார்

விநாயகர், ''அன்பனே! புதிதாக
பாடுவதானால் சிந்தித்துச் சிந்தித்து
பாட வேண்டும். கால தாமதமாகும்
எல்லாரும் இடர் வந்தபோது எ
மையே நினைக்கின்றார்கள். நமக்கு அ
சிறந்த அலுவல்கள். நம்முடைய எழு
கோல் எழுதுகின்ற வேகத்தில்
பாடுவாயானால் நாம் எழுதுகி
றோம்'' என்றார்.

வியாசர், ''அண்ணலே! அதுபடியே
தேவரீர் எழுதுகின்ற வேகத்தில் பா
வேன். ஆனால் பொருள் தெரிந்
எழுதுதல் வேண்டும்'' என்றார்.

விநாயகர் அதற்கு இணங்கியரு
னார். விநாயகர் விரைந்து எழுதுவ
ராயினார். வியாசர் அவருடைய வேக
துக்கு ஏற்பப் பாடுவாராயினார். இடை
யிடையே இரு பொருள்கள் அமைய
கூடிய பதங்களை வைத்துப் பாடினா
''இதற்கு யாது பொருள்?'' என்
விநாயகர் சிறிது சிந்திப்பதற்குள்
பலப்பல சுலோகங்களை மனத்தில் பாடி
கொள்ளுவார். இவ்வாறு வியாச
பாட விநாயகப் பெருமான் மகாபா
த்தை மேரு மலை மீது எழுதியருளினா

வியாசர் பாரதத்தை அறுபது லட்ச
கிரந்தங்களில் பாடி முடித்தார். பாரத
தான் எல்லா நூல்களிலும் பெரியது
கந்தபுராணம், இராமாயணம், சாவி
திரி, நளன் முதலிய பலப் பல வரலா
றுகள் பாரதத்தில் அடங்கியுள்ளன.

மகாபாரதத்தில் இல்லாத அறங்க
வேறு நூல்களில்இல்லை. அறங்கள் அனை
தும் பாரதத்துக்குள் அடங்கியுள்ளன

இந்த அறுபது லட்சம் கிரந்த
களில் முப்பது லட்சம் கிரந்தங்க
தேவலோகத்தில் நின்றன. பதினைந்

லட்சம் கிரந்தங்கள் யட்சலோகத்திலே நின்றுவிட்டன. பதினான்கு லட்சம் கிரந்தங்கள் அசுர லோகத்திலே நின்றுவிட்டன. ஒரு லட்சம் கிரந்தம் மட்டுமே பூலோகத்தில் நின்றது.

வியாசர் விநாயகருடைய எழுதுகின்ற தந்தத்தின் வேகத்தைக் குறைக்கும் பொருட்டுப் பாடிய கிரந்தங்கள் 8800.

''இந்த எண்ணாயிரத்து எண்ணூறு கிரந்தங்களுக்குப் பொருள் விநாயகருக்குத் தெரியும். எனக்குத் தெரியும். என் மகன் சுகனுக்குத் தெரியும். சஞ்சயனுக்குத் தெரியுமோ? தெரியாதோ?'' என்று வியாச பகவானே கூறியுள்ளார்.

'பாரதத்தை மேரு வெளி வெளி திகழ்
கோடொடித்த நாளில் வரை வரைபவர்
பானிறக் கணேசர் குவா குவாகனர்
இளையோனே!''

—— திருப்புகழ்

மகாபாரதமாகிய இதிகாசத்துக்கு பகவத் கீதையும் யட்சப்ரச்னையும் இரு கண்கள் போன்றவை.

வியாச பகவான் இந்த இரண்டையும் நமக்கு அரிய பெரிய வரப் பிரசாதமாக அருளியுள்ளார்.

யட்சப்ரச்னை அதிஅற்புதமானது. வினாவும் விடையுமாக அமைந்தது.

யட்சமூர்த்தி வினவத் தருமநந்தனர் விடைகூறுகின்றார்.


வினா: — உலகில் ஆச்சரியமானது எது?

விடை: நாள்தோறும் இறந்து போகின்றவர்களைக் கண்டும் நமக்கு மரணம் இல்லை என்று எண்ணிக் கொண்டு இருக்கின்றார்களே? அது தான் அதி ஆச்சரியம்.

இவ்வாறு சிந்தனைக்கு விருந்தாக அறியாமைக்கு மருந்தாக விளங்குவது யட்சப்ரச்னை.

ஐந்தாம் வேதமாகிய மகாபாரதத்தை உலகம் உய்யும் பொருட்டுத் தனிப் பெருங் கருணையால் ஞானமேயாய தந்தத்தால் மகா மேருகிரியில் எழுதியருளினார் விநாயகர்.

இது விநாயகப் பெருமானுடைய கருணைத் திறத்தைக் குறிக்கின்றது.



காந்திஜி விளையாடிய கிரிக்கெட்!

மகாத்மா காந்தி கிரிக்கெட் விளையாடினாரா ? நம்புவதற்கு முடியவில்லை! ஆச்சரியமாக இருக்கிறது ! மகாத்மா காந்தி, சுதந்திரப் போராட்ட வீரர் என்பது மட்டுமல்ல, விளையாட்டுப் பிரியர் என்பது பலருக்கும் வியப்பை அளிக்கும். ஆனால் அது உண்மை. சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் அவர் விளையாடத் தயாராகிவிடுவார். முறையாக விளையாடத் தமக்குத் தெரியுமா தெரியாதா என்பது குறித்து அவர் கவலைப்படுவதில்லை.

ராஜ்கோட் நகரில் ஆல்பிரட் உயர்நிலைப் பள்ளியில் படித்தபோது, காந்திக்குக் கிரிக்கெட் பற்றும் இருந்தது. மாணவனாக இருந்தபோது அவர், கிரிக்கெட் விளையாட்டில் தீவிரமாகப் பங்கெடுத்து வந்தார். ஒரு முறை அவர் 'பவுண்டரி' அடித்துச் சக மாணவர்களின் பாராட்டுதலையும் பெற்றார். சௌராஷ்டிராவின் கல்வி அறிஞர் ஒருவர் மகாத்மாவுடன் படித்தவர். அவர் சமீபத்தில் இந்த நிகழ்ச்சியை நினைவுபடுத்தினார்.


1931ஆம் ஆண்டில் இந்தியக் கிரிக்கெட் விளையாட்டு வீரர்கள், ஐரோப்பாவில் சுற்றுப் பிரயாணம் செய்து, பல விளையாட்டுப் போட்டிகளில் பங்கெடுத்துக் கொள்வதற்கு மகாத்மா காந்தி காரணமாக இருந்தார் என்பதைக் கேட்கவும் உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கும்.

பட்டௌடி நவாப், அப்போது ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் படித்துக் கொண்டு இருந்தார். (முன்னாள் கிரிக்கெட் கோஷ்டி காப்டன் பட்டௌடி நவாப்பின் தந்தை) பிரிட்டனில் படித்துக் கொண்டிருந்த ஆசிய மாணவர்களைக் குறிப்பாக இந்திய மாணவர்களைத் திரட்டி, ஒரு கிரிக்கெட் கோஷ்டியை அமைத்தார். கிழக்கு — மேற்கு நாடுகளுக்கும் இடையே நல்லெண்ணத்தை உண்டாக்க, கிரிக்கெட் விளையாட்டுப் போட்டிகள் நடத்த அவர் விரும்பினார். ஆனால் ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப் பிரயாணம் செய்வதற்குத் தேவையான கணிசமான பணத்துக்கு அவர் எங்கே போவது ?

இந்தச் சமயத்தில் வட்டமேஜை மகாநாட்டுக்காக மகாத்மா இலண்டனுக்கு வந்திருந்தார். அவரைப் பட்டௌடி நவாப் சந்தித்து, கிழக்கு — மேற்கு நாடுகளிடையே நல்லெண்ணத்தை வளர்க்க, ஐரோப்பிய நாடுகளில் ஆசிய கிரிக்கெட் வீரர்கள் கோஷ்டி சுற்றுப் பிரயாணம் செய்து, விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கும் திட்டத்தைக் காந்தியிடம் எடுத்துரைத்தார். இந்தத் திட்டத்தை முழு மனத்துடன் ஆதரித்த காந்தி, 'சபாஷ், நல்ல திட்டம்' என்று நவாப்பின் முதுகில் தட்டிக் கொடுத்துப் பாராட்டினார். நிதி திரட்டித் தருவதாகச் சொன்னதுடன் நிற்காமல் காந்தி தம் பையில் இருந்து ஐந்து பவுன் நோட்டையும் எடுத்துக் கொடுத்தார்.

மகாத்மா ஆதரிக்கிறார் எனத் தெரிந்ததும், நாட்டின் மூலை முடுக்கிலிருந்தெல்லாம் பணம் குவியலாயிற்று. பட்டௌடி நவாப்






பும், தமது கிரிக்கெட் குழுவுடன் ஐரோப்பாவின் பல நாடுகளில் சுற்றுப் பிரயாணம் செய்து, கிரிக்கெட் போட்டி களில் பங்கெடுத்துக் கொண்டார்.

தீராத விளையாட்டு பிள்ளை

புனாவில் ஆகாகான் மாளிகையில் சிறை வைக்கப்பட்டிருந்த போதிலும், காந்தியின் 'விளையாட்டுத்தனம்' போக வில்லை. மாளிகையில் கிடங்கு ஒன்றில், ''டேபிள் டென்னிஸ்'' கிளப் ஒன்றை ஆரம்பிக்க அன்னை கஸ்தூரிபாய் முடிவு செய்தார். ஒரே ஒரு நிபந்தனையின் பேரில், இந்த கிளப்பைத் தொடங்கி வைக்க காந்தி இசைந்தார். ''முதல் டேபிள் டென்னிஸ் மாட்ச், எனக்கும் கஸ்தூரிபாய்க்கும் இடையே நடக்க வேண்டும்'' என்பதே அந்த நிபந்தனை.

காந்திஜி ஒருபுறமும், கஸ்தூரிபாய் மற்றொரு புறமும் மட்டைகளைப் பிடித்து டேபிள் டென்னிஸ் விளையாடத் தயாரானார்கள். கஸ்தூரி பாய் முதன் முதலாக அடித்த பந்து, காந்தியின் மொட்டை மண்டையில் போய் 'சொட்' என்று விழுந்தது. கஸ்தூரி பாய் பதறி அடித்துக் கொண்டு, மட்டையைக் கீழே போட்டு விட்டு ஓடி வந்தார். ஆனால் மொட்டை மண்டையில் 'சொட்டை' விழவில்லை. மேற்கொண்டு விளையாடக் கஸ்தூரிபாய்க்குப் பிரியமில்லை. ஆனால் காந்தியோ விடுவதாக இல்லை. எது வும் நடவாதது போல் தொடர்ந்து விளையாடினார்.





''வெள்ளையனே வெளியேறு''—போராட்டத்துக்குப் பின்னர், காந்தியும், மற்றத் தலைவர்களும் ஆகாகான் மாளிகையில் அடைக்கப் பட்டிருந்தனர். ஒரு சமயம், காந்தியை 'பேட்மிண்டன்' விளையாடக் கவிக்குயில் திருமதி சரோஜினி நாயுடு அழைத்தார். ''இதற்கு முன்னர், நான் பேட்மிண்டன் விளையாடியதில்லை என்ற லும் உன்னைத் தோற்கடிக்கிறேன் பார்!'' என்று காந்திஜி சவால் விட்டார்.

திருமதி சரோஜினி நாயுடுவுக்கு வலது மணிக்கட்டில் ஏதோ காயம் ஏற்பட்டிருந்தது. அதனால் இடது கையில் மட்டையைப் பிடித்து விளை யாடத் தொடங்கினார். காந்தியும் இடது கையில் மட்டையைத் தூக்கிக் கொண்டு விளையாட முற்பட்டார்.

'' எந்தக் கையில் மட்டையைப் பிடிப்பது என்றே உங்களுக்குத் தெரிய வில்லையே, நீங்களா என்னைத் தோற் கடிக்கப் போகிறீர்கள்?'' என்று திருமதி சரோஜினி நாயுடு கேலி செய்தார்.

''நீ மட்டும் ஏன் இடது கையில் ராக்கெட்டைப் பிடித்துக் கொண்டிருக் கிறாய்?'' என்று காந்தி வினவினார்.

'' வலது கையில் காயம், அதனால் தான்'' என்று கவிக் குயில் பதில் கூறினார்.

எனினும் காந்தி தொடர்ந்து இடது கையிலேயே ராக்கெட்டைப் பிடித்துக் கொண்டு விளையாடினார். '' ஏன்?'' என்று சரோஜினி நாயுடு மீண்டும் வினவினார்.

''முதலில் தவறுதலாக இடது கையில் ராக்கெட்டைப் பிடித்தேன். ஆனால் இப்போது தவறு புரிந்துவிட் டது. ஆனால் ஒரு பெண்ணுக்குக் காயம் பட்டிருக்கும்போது, அந்நிலையை எனக் குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள நான் விரும்பவில்லை'' என்று காந்தி தமக்கே உரிய முறையில் பதில் சொன்னார்.

''பாட்மிண்டன் கோர்ட்' முழுவதும் சிரிப்பு ஒலி எழுந்தது. —கதிர்சனு



தச்சர் தம் சிஷ்யனிடம் கூறினார். தச்சரின் சிஷ்யன் தன்னுடைய சின்னக் காலினால் அளந்து மூன்று பாத அகலத்துக்கும் ஆறு பாத நீளத்துக்கும் ஒரு கட்டிலைத் தயாரித்தான்.

அரசர் கட்டிலைப் பார்த்து ஆனந்தப் பட்டார். அரசிக்கு பிறந்த நாள் வரும் வரை கூட அவரால் காத்திருக்க முடியவில்லை. உடனே கூப்பிட்டார் ராணியை. கட்டிலில் படுத்துப் பார்க்கும்படி கூறினார். அந்தக் கட்டில் ராணிக்குப் போதவே இல்லை! ராஜாவுக்குக் கோபமான கோபம். உடனே மதி மந்திரியைக் கூப்பிட்டார். மந்திரி தச்சனாரை அழைத்தார். தச்சனார் சீடனை அழைத்தார். மதிமந்திரி காவலாளியைக் கூப்பிட்டார். சீடப்பிள்ளை சிறைக்குள் தள்ளப்பட்டான்!

தச்சனாரின் சீடனுக்குத் துக்கமான துக்கம் — **ராணிக்குச் செய்த கட்டில் சின்னதாகப் போவானேன்?** யோசித்தான், யோசித்தான், யோசித்...!

திடீரென்று அவன் கால்களே அவனுக்கு அதன் ரகசியத்தைக்கூறிவிட்டன!

கட்டில் என்பது மூன்று அரச பாதங்களின் அகலமும் ஆறு அரச பாதங்களின் நீளமும் கொண்டது. சிஷ்யப் பையனான என் மூன்று பாத அகலமும் ஆறு பாத நீளமும் கொண்ட கட்டில் சின்னதாகத்தானே இருக்கும்? "**அரசிக்கு ஏற்ற கட்டிலை இப்போது என்னால் செய்ய முடியும். அதற்கான அளவுகள் இப்போது எனக்குத் தெரியும்**" என்று கத்தினான், பிரதம தச்சரின் சீடப் பையன். இதை உடனே சிறையதிகாரியிடம் விளக்கினான். அவர் பிரதம தச்சரிடம் கூற, அவர் மதி மந்திரியிடம் விவரிக்க, மந்திரி மன்னரிடம் சொல்ல, மன்னருக்கோ தம் கால் அளவைத் தருவதற்குச் சிறைச்சாலைக்குப் போக நேரமில்லை. ஆகவே ஆஸ்தான சிற்பியைக் கூப்பிட்டார். தம் ஒரு கால் பாதரட்சையைக் கழற்றினார். பாதுகை இல்லாத பாதத்தை முதலில் செய்திருந்த குட்டைக் கட்டிலின் மீது வைத்துக் கொண்டு அளவு காட்டினார். சிற்பி சலவைக் கல்லிலே அரசரின் பாதத்தைப் போலவே அதே அளவில் ஒரு பாதத்தைச் செதுக்கித்தர, அதைச் சிறைச்சாலைக்கு அனுப்பி வைத்தார்.

அந்தச் சலவைக் கல் காலை அளவாகக் கொண்டு ஆறு அரச பாத நீளமும் மூன்று அரச பாத அகலமும் கொண்ட கட்டிலைத் தயாரிக்கலானான் சீடன். அது அரசியின் பிறந்த நாளன்றைக்குச் சரியாக முடிந்தது. மகாராஜா மகாராணியைக் கூப்பிட்டார். புத்தாடை அணிந்து கொண்டு புதிய கட்டிலில் படுத்துக் கொள்ளச் சொன்னார்.


கட்டில் அரசியின் உயரத்துக்குக் கனகச்சிதமாக இருந்தது.

சும்மாச் சொல்லக் கூடாது. இதுவரை அரசிக்கு அதுபோன்ற அழகான பரிசை யாருமே கொடுத்ததில்லை.

மன்னருக்கு மகா மகா மகா மகிழ்ச்சி! சிஷ்யனான தச்சனார்ப் பையனைச் சிறைச்சாலையிலிருந்து அழைத்து வரச் செய்தார். அவனை இளவரசனாக்கினார். ஏனென்றால் மன்னருக்கும் மகாராணிக்கும் குழந்தைகளே இல்லை!

கத்துக்குட்டி—தச்சனார் இளவரசனைப் பாராட்ட வரலாறு காணாத வகையில் விழா எடுக்கப்பட்டு மாபெரும் ஊர்வலமும் விடப்பட்டது நகரத்திலே.

அதன் பிறகு 'என் கட்டில் ஆறு அடி நீளமும் மூன்றடி அகலமும் உடையது' என்று யார் கூறினாலும் அது எவ்வளவு பெரியது என்பது எல்லோருக்கும் தெரிந்து விட்டது. அன்றிலிருந்து யாராவது எதையாவது அளக்க வேண்டுமென்றால் அரச பாதத்தையே அளவாகக் கொண்டார்கள்.



களாக அலங்கரிக்கப்பட்டுள்ள அவ்விருவரும்தான் கொலுப்படியின் நாயகர்களாக விளங்குவார்கள். அதன் பிறகு மற்ற படிகளில் நமது புராண இதிகாசங்களில் வரும் கடவுளர்களின் உருவங்களும் அவதாரங்களும் மற்றும் அன்றாட வாழ்வில் பல்வேறு நிலைகளை விளக்கும் பொம்மைகளும் இடம் பெறுவது வழக்கம் இல்லையா? ஆனால் ஜப்பானில் இப்படியல்ல. எல்லா வீடுகளிலும் அலங்கரிக்கப்படும் பொம்மைக் கொலு குறிப்பிட்ட பொம்மைகளைக் கொண்டதாகத்தான் இருக்கும். அதற்கு ஒரு நியதி வைத்திருக்கிறார்கள். முதல் படியில் ஜப்பானிய மன்னரும் மகாராணியும் பொம்மை உருவில் உட்கார்ந்திருப்பார்கள், ஆதி காலத்து அலங்கார உடையில். அவர்களுக்குப் பின்னால் மடக்கக்கூடிய பொன் இழைகளால் ஆன திரை தொங்கவிடப்பட்டிருக்கும். அந்த முதல் படியின் இரு பக்கத்திலும் விளக்குக் கம்பங்கள் நிறுத்தப்பட்டிருக்கும். இரண்டாவது படியில் மூன்று பணிப் பெண்களின் பொம்மை. நடுவில் உள்ளவள் உட்கார்ந்திருப்பாள். அவளுக்கு இரு பக்கமும் இருப்பவர்கள் கையில் மதுக் கோப்பையும் கூஜாவும் தாங்கியபடி நின்று கொண்டிருப்பார்கள், மன்னருக்கும் ராணிக்கும் பானம் அளிக்கும் கோலத்தில்.

மூன்றாவது படியில் வாத்தியக்காரர்கள் ஐந்து பேர் அமர்ந்திருப்பது போன்ற பொம்மைகள் இடம் பெறும். புல்லாங்குழலுடன், ஒருவன் மூன்று வகை மத்தளங்களுடன் மூன்று பேர். ஐந்தாமவர் இவர்களை இயக்கும் தலைவர். அடுத்த தட்டில் போர்வீரர் இருவர் வில்லும் அம்பும் ஏந்தி நிற்பார்கள். அதற்குக் கீழே உள்ள தட்டில் மூன்று ஊழியர்களின் பொம்மை. அதை அடுத்து மாட்டு வண்டி, பல்லக்கு, ரதம் இப்படியான பொம்மைகள். கீழ்த் தட்டில் மேஜை, பீரோ, கட்டில், உணவுத் தட்டு போன்ற அன்றாட உபயோகத்துக்கான பொருள்களின் சின்னஞ் சிறு வடிவமைப்புக்கள் இடம் பெறும். இந்தப் பொம்மைகள் ஒவ்வொரு ஜப்பானியப் பொம்மைக் கொலுவிலும் அவசியம் இருக்கும். இவை தவிர வேறு சில பொம்மைகளும் இடம் பெறலாம். பொம்மைகளை அழகுபடுத்துவதில் ஜப்பானியர்கள் கைதேர்ந்தவர்களாயிற்றே. ஆகவே, பொம்மைகளை யெல்லாமே வண்ண வண்ணப் பட்டுத் துணிகளால் சரித்

பொம்மைக் கொலு — ஹினா மட்சூரியின் அமைப்பு





திர காலத்துக்கு ஏற்ற முறையில் அலங்கரித்திருப்பார்கள். படிகளை ஆழ்ந்த சிவப்பு நிறத் துணிகளால் போர்த்தி யிருப்பார்கள். ஆரஞ்சுப் பழச் செடியும், பூத்துக் குலுங்கும் 'பீச்' மரத்தின் வடிவமும் படிகளில் இடம் பெற்றிருக்கும். பெண்களின் குணங்களான மிருதுத் தன்மை, சாந்தம், சமாதானம் ஆகியவைகளைக் குறிக்கவே பீச் மரத்தின் பிரதி இடம் பெறுகிறது. மண வாழ்வின் மகிழ்ச்சியைப் பிரதிபலிப்பது 'பீச் ப்ளாஸம்ஸ்' என்பது ஜப்பானியரின் நம்பிக்கை.

பொம்மைக் கொலுப் பண்டிகை முடிந்ததும் பொம்மைகளையெல்லாம் ஒழுங்காகப் பெட்டிகளில் அடக்கம் செய்து பத்திரப்படுத்தி வைப்பார்கள். அடுத்த ஆண்டுதான் அவைகளை மறுபடியும் வெளியில் எடுப்பார்கள்.

இதே போல் பையன்களுக்காகவே ஒரு விழா ஒவ்வொரு வருஷமும் ஐந்தாவது மாதத்தில் (மே மாதம்) ஐந்தாவது நாளில் கொண்டாடப்படுகிறது. சிறுமிகளின் விழாவைப் போலவே இதுவும் ஜப்பானியப் பையன்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்தது.

வீட்டின் முற்றத்திலோ தோட்டத்திலோ பெரிய மூங்கில் அல்லது மரக் கம்பத்தை நட்டு அதன் உச்சியில் காகிதத்தினாலோ துணியினாலோ செய்யப்பட்ட மீன் வடிவக் காற்றாடிகளைப் பறக்க விடுவார்கள். அதனுள் காற்றுப் புகுந்து விண்வெளியிலே அந்த மீன் நிஜமாகவே நீந்துவதுபோல் தோற்றமளிக்கும். வீட்டிலுள்ள ஒவ்வொரு பையனுக்கும் ஒரு மீன் காற்றாடி வீதம் கம்பத்தின் உச்சியில் கட்டப்பட்டிருக்கும். பெரிய காற்றாடியின் நீளம் பதினைந்து அடிக்கும் மேலிருக்கும். அடுத்தடுத்து அவைகளின் நீளம் குறைந்து கொண்டே வரும். சின்னப் பையன் இருந்தால் சின்னூண்டுக் காற்றாடி பறக்கும். பாய்ந்து ஓடும் நதிகளிலும், ஓடைகளிலும் நீர் வீழ்ச்சியிலும் எப்படி மீன் எதிர்நீச்சலிட்டு முன்னேறுகிறதோ அதே போல அந்தக் காற்றாடிகளுக்குரிய பையன்களும் வாழ்க்கையில் எதிர்ப்படும் கஷ்டங்களைச் சமாளித்து முன்னேற வேண்டும் என்பதே இந்த மீன் காற்றாடிகளின் தத்துவம்.

வீட்டினுள்ளே, சிறுமிகளின் பொம்மைக் கொலு விழாவைப் போலவே படிகள் அமைத்து அதில் புகழ்பெற்ற போர் வீரர்களையும் சேனாதிபதிகளையும் அவரவர்களுக்கு உரிய உடையலங்காரத்துடன் வைப்பார்கள். கத்தி, கேடயம், கவசம், சட்டி, கொடி இப்படியான ஆண் மகனின் வீர வாழ்வுக்கு உரிய ஆயுதங்கள் இக்கொலுப்படிகளை அலங்கரிக்கும்.

ஜப்பானியர்கள் தங்கள் சிறுவர் சிறுமிகளுக்காகவே இத்தகைய தேசிய விழாக்களைக் கொண்டாடி அவர்களைப் பண்புள்ள வருங்காலப் பிரஜைகளாக்குகிறார்கள். — கிருஷ்ணவேணி

புகழ்பெற்ற மிஹாரு பொம்மைகள்



குரூபியை மணந்த குணவதி

விகேயெம்

ரொம்ப ரொம்பக் காலத்துக்கு முன்னாலே இந்திரபுரி என்ற நாட்டிலே தனதத்தன் என்று ஒரு வியாபாரி வாழ்ந்து வந்தான். தனதத்தனுக்கு மாணிக்கவல்லி, மரகதவல்லி, குணவதி என்று மூன்று குமாரிகள். செல்வந்தனான வியாபாரியின் கப்பல்கள் பல நாடுகளிலிருந்தும் பொருள்களைக் கொண்டு வந்து குவித்தன. இந்திரபுரியிலே ஏற்றமிகு வாழ்வு வாழ்ந்து வந்தான் தனதத்தன். சுகபோக வாழ்வு என்பார்களே அதைத் தனதத்தனும் அவன் குமாரத்திகளும் அனுபவித்து மகிழ்ந்தார்கள். விதம்விதமான ஆடை அணிகள், நவ நவமான நகைகள், நாவுக்குச் சுவையான உண்டிகள், இட்ட பணியைச் சட்டென முடிக்க ஏவலாளர் எந்த நேரமும். துன்பம் என்பதையே அறியாத ஆனந்த வாழ்வு.

இந்த மகிழ்ச்சி நிறைந்த வாழ்வுக்குத் திடீரென்று ஒரு நாள் முடிவு ஏற்பட்டது. தனதத்தனின் கப்பல்கள் நடுக்கடலில் கடும் புயலில் சிக்கி நாசமாயின. இன்பத்தின் உச்சாணிக் கிளையிலே உறங்கியவன் தூக்கி எறியப்பட்டான், துன்பத்தின் காலடியிலே. தன் வீடு வாசல், நிலம் நீச்சு அத்தனையையும் இழந்து ஆண்டியானான் தனதத்தன் - ஒரே நாளில்.

சுகபோக வாழ்வு மறைந்ததற்காக வியாபாரி வருந்தவில்லை. ஆனால் செல்வத்திலேயே வளர்ந்த தம் குழந்தைகளை எண்ணியே கவலைப்பட்டான். அவர்களை அழைத்து, ''குழந்தைகளே! கஷ்டம் தெரியாமல் இத்தனை காலம் வளர்ந்து விட்டீர்கள். இனி நமக்குச் சோதனைக் காலம். ஏழையாக வாழப் பழகிக் கொள்ளுங்கள். அது உங்களுக்குத் தெரியாத ஒன்று. சிரமமாகத்தான் இருக்கும். ஆனால் அப்படி வாழ்ந்துதான் ஆகவேண்டும்'' என்றான் கண்ணீர் வழிய.

தகப்பனாரின் கண்ணீரையும் கலக்கத்தையும் கண்ட கடைசிப் பெண்ணான குணவதி, ''வருந்த வேண்டாம் அப்பா. இத்தனை காலமாகச் சுகமாக வாழவில்லையா? அன்பும் சகிப்புத் தன்மையும் இருந்தால் எந்தத் துன்பத்தையும் வெற்றி கொண்டு விடலாம். எங்களுக்காக நீங்கள் கவலைப்படவேண்டாம்'' என்று ஆறுதல் கூறினாள். பெயருக்கு ஏற்ப அவள் குணவதி. ஆனால் மூத்த பெண்களான மாணிக்கவல்லியும், மரகதவல்லியும் குணவதியின் குணத்துக்கு நேர் மாறானவர்கள். சகிப்புத் தன்மை என்பதே கிடையாது. அணிமணிகளும் ஆடை ஆபரணங்களும் ஆடம்பர வாழ்வும் பறிபோனதை எண்ணி இடிந்து போய்விட்டார்கள். இனி தங்களுக்கு வாழ்வே கிடையாது; வாழவே முடியாது என்று ஏங்கிச் சோர்ந்து போனார்கள்

ஆனால் குணவதியோ தகப்பனாரின் வேதனையைக் குறைக்க எப்போதும்



சிரித்த முகத்துடன் அவருக்கு உற்சாக மூட்டிக் கொண்டிருந்தாள். நகரத்திலிருந்து கிராமத்துக்குக் குடிபெயர்ந்தார்கள். மாளிகை வாழ்வு வாழ்ந்த மூத்த சகோதரிகளுக்குக் குடிசை வாழ்வு கொஞ்சமும் பிடிக்கவில்லை. கடுத்த முகத்துடன் ஒரு மூலையில் உட்கார்ந்திருந்தார்கள். குணவதிதான் ஓடியாடி வேலைகளெல்லாம் செய்தாள். கிடைத்ததைக் கொண்டு வந்து போடுவான் தனதத்தன். மூத்த பெண்கள் முணு முணுப்பார்கள். முகம் சுளிப்பார்கள். தகப்பனாரை ஏசுவார்கள். ஆனால் குணவதியோ தகப்பனாருக்கு உதவியாக உழைப்பாள். சமைக்கக் கற்றுக்கொண்டாள். கிழிந்த ஆடைகளைத் தைத்துக் கொண்டாள். சதா துருதுருவென்று ஓடியாடி உழைத்தாள். உற்சாகமாக இருந்தாள். சுக வாழ்வு வாழ்ந்த போது எப்படி மகிழ்ச்சியோடு மனநிறைவோடு இருந்தாளோ, அப்படியே இப்போதும் இருந்தாள். குணவதியின் சிரித்த முகத்திலே, குறை சொல்லாத குணத்திலே தனதத்தன் தனக்கு ஏற்பட்டுள்ள துக்கத்தையும் மறந்தான். குணவதியிடம் அவன் அன்பு அதிகமாயிற்று.

குணவதியின் மலர்க் கைகள் பழக்கப் படாத காரியங்களினால் கன்றிச் சிவந்தன. ஆனால் அப்போதும் அவள் குறை சொல்லவில்லை. ஒரு காரியமும் செய்யாமல் மூலையில் உட்கார்ந்து குறை கூறியபடி உண்டு உறங்கும் மாணிக்கவல்லி, மரகதவல்லியின் முகத்திலே அழகு அழிந்தது. இளமை மறைந்தது. ஆனால் குணவதி முன்னைவிடக் கவர்ச்சியாக விளங்கினாள். எளிய ஆடையிலும் எல்லோரது கவனத்தையும் கவரலானாள். குணவதியின் அன்பும், ஆறுதலான வார்த்தைகளும் தனதத்தனுக்கு இந்த எளிய வாழ்க்கையே இன்பமாக இருந்தது. ஆனால் மூத்த பெண்களோ அவனை நிம்மதியாக இருக்க விடவில்லை.

''நாம் மறுபடியும் செல்வந்தர்களாக ஆகவே முடியாதா?'' என்பாள் மாணிக்கவல்லி அடிக்கடி.

''இப்படி ஓர் அவல வாழ்வு வாழ்வதற்காகவா நான் பெண்ணாகப் பிறந்தேன்?'' என்று புலம்புவாள் மரகதவல்லி. இவர்களின் புலம்பலைப் பொறுக்க முடியாத தனதத்தன் தூர தேசத்துக்குச் சென்று வியாபாரம் செய்து மறுபடியும் செல்வந்தனாக முடிவு செய்தான். தகப்பனாரின் இந்த முடிவிலே மகிழ்ந்தார்கள் மூத்த பெண்கள். குணவதியோ இந்த வயதில் தகப்பனார் தூர தேசத்துக்குப் போகிறாரே என்று கவலையே பட்டாள்.

''உடனே கிளம்புங்கள். விரைவில் ஏராளமான செல்வத்துடன் திரும்புங்கள். நல்ல ஆடைகளையும் ஆபரணங்களையும் உணவையும் கண்டு எத்தனை காலம் ஆகிறது'' என்றார்கள் மாணிக்கமும், மரகதமும். அயல் நாடு சென்று பொருளீட்டித் திரும்பும்போது தங்களுக்கு என்னென்ன வாங்கி வர வேண்டும் என்பதற்கு ஒரு நீண்ட பட்டியலை கொடுத்தனர் இருவரும்.

கண் கலங்க நிற்கும் குணவதியிடம் கேட்டான், தனதத்தன்: ''அம்மா! உனக்கு என்ன வாங்கி வரட்டும்?''

''நீங்கள் சௌக்கியமாகத் திரும்பி வாருங்கள், அதுவே போதும்'' என்றாள் குரல் கம்ம. தனதத்தன் வற்புறுத்தவே, ''எனக்கு ஒரு வெள்ளை ரோஜா மலர் வாங்கி வாருங்கள் போதும்'' என்றாள் குணவதி. இதைக் கேட்ட அவள் மூத்த சகோதரிகள் கைகொட்டிச் சிரித்தார்கள். ''என்ன அசட்டு ஆசை? வெள்ளை ரோஜாவினால் என்ன பயன்? மறுநாளே வாடிவிடும். விலையுயர்ந்த பட்டாடைகள், ஆபரணங்களைக் கேட்க மாட்டாயோ?'' என்று கேலி செய்தார்கள்.

தனதத்தன் பொருள் தேடி அயல் நாடு சென்றான். புதிய இடத்தில் பல மாதங்கள் தங்கித் தன் திறமைகளையெல்லாம் செலவிட்டான். முன்போல மறுமுறை சீமானாக முடியும் என்ற நம்பிக்கை கிளம்பும்போதே அவனுக்கு இல்லை. எதிர்பார்த்த அளவுக்குக்கூடப் பொருள் சேர்க்க முடியவில்லை. குணவதியின் சிரித்த முகம் அவனைச் சொந்த ஊர் திரும்பத் தூண்டியது. எளிய வாழ்க்கை வாழ்ந்தபோது அடைந்த மகிழ்ச்சியும் நிம்மதியும் சுக வாழ்வில் கிடைக்கவில்லை என்பதை உணர்ந்தது தனதத்தனின் உள்ளம். மகிழ்ச்சி செல்வத்திலே கிடைக்காது, போதுமென்ற மன நிறைவிலேதான் கிடைக்கும் என்பதைத் தன் மூத்த பெண்களுக்கு உணர்த்த வேண்டும் என்று எண்ணியபடியே திரும்பிக் கொண்டிருந்தான் அவன்.

வழியில் ஓர் அடர்ந்த கானகத்தைக் கடக்க வேண்டும். காட்டினுள் புகுந்ததுமே பயங்கரமான புயலும் மழையும் பிடித்துக் கொண்டன. வழி தெரியாமல் மழை அடித்துச் சொரிந்தது. இடியும் மின்னலும் கிடுகிடுக்க வைத்தன. குதிரை முன்னேற முடியாமல் மிரண்டது. வழி தவறி விட்டதை உணர்ந்தான் வியாபாரி. பசியும் களைப்பும், உடல் தெப்பலாக நனைந்துபோனதும் அவன் மன உறுதியைக் குலைத்துவிட்

டன. அப்படியும் கானகத்துள் முன்னேறிக் கொண்டிருந்தான். அவனது குதிரையும் சோர்ந்து போய் அடிக்கடி தடுமாறலாயிற்று. 'தங்குவதற்கு விரைவில் ஏதாவது ஓர் இடம் கிடைக்காவிட்டால் நான் அழிந்தே போவேன்' என்ற முடிவுக்கு வந்தபோது தூரத்தில் ஏதோ ஒரு வெளிச்சம் மினுக்கிட்டது. நம்பிக்கையோடு அந்த வெளிச்சத்தை நோக்கிக் குதிரையைச் செலுத்தினான். இருண்ட கானகத்திலே ஒளி வீசும் வைரமாகத் திகழ்ந்தது அந்த அரண்மனை. 'இது யாரோ ஓர் இளவரசனின் சுக வாசஸ்தலமாக இருக்க வேண்டும். இந்த நிலையில் என்னைக் காணும் யாரும் எனக்கு உணவும் உடையும் தந்து உதவுவார்கள்' என்று நினைத்தபடியே அந்த அரண்மனையின் பெரிய கதவுகளைத் தள்ளித் திறந்து கொண்டு உள்ளே போனான். வரவேற்கவோ தடுத்து நிறுத்தவோ அங்கு யாருமே இல்லாதது வியப்பாக இருந்தது தனதத்தனுக்கு. தன் நிலையை விடத் தன் குதிரையின் நிலை மோசமாக இருப்பதை உணர்ந்து நேராகக் குதிரை லாயத்துக்குச் சென்றான். லாயத்தில் குதிரைகள் ஏதுமில்லை. ஆனால் குதிரைகளுக்கான உணவு ஏராளமாக இருந்தது. கதகதப்புக்கு ஏற்ற போர்வைகள் இருந்தன. விளக்கும் எரிந்து கொண்டிருந்தது. குதிர்ரைக்குக் கொள்ளும் புல்லும் வைத்து அதன் மீது இரண்டு கம்பளிப் போர்வைகளைப் போட்டுப் போர்த்திவிட்டு அரண்மனைக்குள் நுழைந்தான். அதன் பெரிய கதவுகள் அகலத் திறந்திருந்தன. அந்த அரண்மனையின் அழகையும் அமைப்பையும் கண்டு வியக்கும் நிலையில் இல்லை அவன். அசதியும் குளிரும் பசியும் அவனைத் தள்ளாட வைத்தன. அரண்மனை முழுதும் பிரகாசமான விளக்குகள் எரிந்துகொண்டிருந்தன. தட்டுத் தடுமாறியபடி ஒரு விசாலமான அறைக்குள் நுழைந்தான் தனதத்தன். அங்கிருந்த பெரிய கட்டிலில் பொத்தென்று விழுந்து அப்படியே தூங்கிப் போனான். அறையில் கதகதப்புக்குக் கணப்பு எரிந்து கொண்டிருந்தது.



விடிந்து வெகு நேரம் கழித்துக் கண் விழித்தான் தனதத்தன். தன் நிலை உணர்ந்து திடுக்கிட்டு எழுந்தான். அந்த விசாலமான வசதி மிக்க அரண்மனையின் சொந்தக்காரரைக் காணும் ஆசையோடு பரபரப்புடன் அவ்வரண்மனையின் எல்லா அறைகளையும் தேடினன். ஆனல் யாரையுமே காணவில்லை. தோட்டத்துக்கு வந்தான். அழகழகான பூச்செடிகள் ஒழுங்காகப் பராமரிக்கப் பட்டுப் பூத்துக் குலுங்கின. வரிசை வரிசையாக எத்தனை விதமான வண்ண மலர்கள்? சொர்க்கம் என்பது இப்படித்தான் இருக்குமோ? என்று வியந்தபடி நடந்து கொண்டிருந்தான். இத்தனை அழகான அரண்மனையும் தோட்டமும் யாருக்குச் சொந்தம்? யாரையுமே காணுமே? என்ற நினைப்பு மெள்ள மெள்ளப் பயமாக உருமாறிக் கொண்டிருந்தது. அப்போது தனதத்தன் ஒரு ரோஜாச் செடி, செடியெல்லாம் பூவாக பூத்துக் குலுங்கியபடி நிற்பதைக் கண்டான். அது வெள்ளை ரோஜாச் செடி. அதைக் கண்டதும் குணவதி ஆசையாகக் கேட்டது நினைவுக்கு வந்தது. அவள் சிரிப்பைப் போலவே அந்த மலர்களும் சிரித்துக் கொண்டிருந்தன. ''என் குணவதிக்குப் பரிசாக இதிலிருந்து ஒரு மலரை எடுத்துப் போகலாம்'' என்று ஒரு பெரிய பூவைப் பறித்தான். அடுத்த விநாடி...

தனதத்தனின் முன்னே கோரமான முகமுடைய ஒரு மனிதன் தோன்றினன். அந்த முகத்தை, அதன் அவலட்சணத்தைக் காணச் சகிக்காத தனதத்தன் தன் கரங்களால் முகத்தை மூடிக் கொண்டான். நெடிதுயர்ந்த உருவம், விலை உயர்ந்த ஆடை ஆபரணங்களை அணிந்திருந்தான் இளவரசனைப் போல. ஆனல் முகமோ... ஐயோ, எத்தனை கோரம்? இப்படியும் ஒரு பிறவியா? அந்த அதிசயப் பிறவி பேசினன். 'என்ன ஆச்சரியம்! அந்த விகார உருவத்தின் குரலா இது? எவ்வளவு இனிமையாக, சங்கீதம் போல் இருக்கிறதே' என்று வியந்தான் தனதத்தன். அந்த மனிதனின் குரலில் • கோபம் கலந்திருந்தது.

''என்னுடைய தனிமையில் குறுக்கிட்டு என் அமைதியைக் குலைத்து விட்டாய். என்னுடைய அனுமதியின்றி என் அரண்மனைக்குள் புகுந்து என் படுக்கையில் உறங்கி, உன் குதிரைக்குப் புல்லும், கொள்ளும் கொடுத்தாய். இப்போதோ நான் மிக மிக நேசிக்கும் செடியிலிருந்து பூவைத் திருடியிருக்கிறாய். இவைகளுக்கெல்லாம் தண்டனையாக உன் உயிரை நீ தர வேண்டும்''

என்றான் அந்த மிருக முகம் கொண்ட மனிதன்.

தனதத்தன் தவித்துப் போனான். ''ஐயா, என் செய்கைகளுக்காக என்னை மன்னித்து உயிர்ப் பிச்சை அளியுங்கள். இந்த மலரை என் அன்பு மகளுக்காகவே பறித்தேன். தயவு செய்து என் குழந்தைகளிடம் போக என்னை அனுமதியுங்கள்'' என்று கெஞ்சினான்.

''உன்னை மன்னித்து அனுப்புகிறேன், ஆனால் ஒரு நிபந்தனையின் பேரில். உன்னுடைய அன்புக்குப் பாத்திரமான மகளை இன்றிலிருந்து மூன்றாவது மாதத்தில் என்னிடம் கொண்டு வந்து விடவேண்டும். அப்படியானால் தான் இங்கிருந்து நீ உயிரோடு போகலாம்'' என்றான் அந்தக் குரூபி.

தனதத்தனுக்கு வேறு வழியில்லை. 'மூன்று மாதத் தவணை இருக்கிறதே. ஏதாவது மார்க்கம் தோன்றாதா இந்த இக்கட்டிலிருந்து தப்ப' என்ற நினைப்புடன் நிபந்தனையை ஏற்றுக் கொண்டான் வியாபாரி.

''நினைவிருக்கட்டும், கொடுத்த வாக்கை நிறைவேற்ற வேண்டும். உன் மகள் குணவதியை இங்கு கொண்டு வந்து விட்டதும் ஒரு பெட்டி நிறைய இங்குள்ள பொற்காசுகளை நிரப்பிக் கொண்டு போகலாம்'' என்று விடை கொடுத்தான் அந்த விந்தை மனிதன்.

தனதத்தன் வீடு திரும்பினான். குணவதிக்கு மகிழ்ச்சியான மகிழ்ச்சி. மூத்த பெண்களுக்கு ஏமாற்றம். அப்பா பெருஞ் செல்வச் சீமானாக வருவார் என்று எதிர் பார்த்திருந்தவர்கள் ஏமாந்து நின்றார்கள்.

நாளாக நாளாகத் தனதத்தனுக்குக் கவலை அரிக்கலாயிற்று. குரூபிக்கு அளித்த வாக்கை எண்ணிக் குமையலானான். அதனால் உடல் இளைத்தது. உற்சாகம் குன்றியது. தகப்பனாரின் பொலிவிழந்த முகத்தைக் கண்ட குணவதி ''உங்களை வாட்டும் கவலையை என்னிடம் சொல்லுங்கள். அது எதுவானாலும் சரி, உங்கள் சுக துக்கங்களில் எனக்கும் பங்குதானே'' என்றாள். முதலில் மறுத்தாலும், முடிவில் தான் உயிரோடு திரும்ப அவளைப் பணயமாக்கி யிருப்பதைக் கூறினான். அதைக் கேட்டபோது குணவதியின் உள்ளம் நடுங்கினாலும் உடனே அவள் சமாளித்துக் கொண்டாள். அவள் அழகி மட்டுமல்ல. தைரியசாலியும் கூட.

''கொடுத்த வார்த்தையைக் காப்பாற்றுவதுதான் நியாயம் அப்பா. கவலைப்படாதீர்கள். குறித்த நாளில் நாம் அங்கு கிளம்புவோம்'' என்றாள் குணவதி.



குறிப்பிட்டபடி குணவதியுடன் தனதத்தன் கானகத்தின் நடுவில் உள்ள கனவு மாளிகைக்குப் போனான். அரண்மனையின் உயர்ந்த படிகளில் குணவதி கால் வைத்ததுமே அழகிய இரு பறவைகள் வரவேற்பது போலக் 'கீச் கீச்'சென்று ஒலி எழுப்பியபடி அவளது மேலாடை முனையைப் பற்றியபடி அரண்மனையின் ஒரு விசாலமான அறைக்கு அழைத்துப் போயின. அங்கு ஓர் இளவரசிக்கான உயர்ந்த ஆடை அணிகள் வைக்கப்பட்டிருந்தன. அப்பறவைகள் அதன் மீது பறந்தபடி 'இவைகளை அணிந்துகொள்' என்று சொல்வது போல் கீச்சிட்டன. குணவதி அந்த அற்புதமான உயர்ந்த ஆடைகளை அணிந்து கொண்டதும், கொள்ளை அழகுடன் காட்சி அளித்தாள்.

குணவதியை அழைத்துக் கொண்டு ஒவ்வோர் அறையாகப் போய்ப் பார்த்தான் தனதத்தன். கடைசியில் ஓர் அறையில் அந்த அரண்மனையின் உரிமையாளனை அவலட்சண முகமுடைய இளவரசன் இவர்களை வரவேற்றான்.

''குணவதியே வருக! வருக! இங்குள்ள அனைத்தும் உன்னுடையவை. உனக்கு என்னால் எவ்விதத் துன்பமும் நேராது. நீ என்னோடு இங்கு மகிழ்ச்சியோடு வாழலாம்'' என்றான்.

முதலில் அவனுடைய கோர முகத்தைக் கண்டு குணவதி நடுங்கினாலும் நாளாவட்டத்தில் அவனுடைய அன்பினாலும் பண்பினாலும் அவனிடம் இரக்கமே ஏற்பட்டது. தன் முகத்தை அவள் காணாதபடி கைகளினால் மறைத்துக்கொண்டு அவன் படும் அவஸ்தை

அவளுக்குப் பரிதாபமாக இருந்தது. அவன் அவளிடம் இதமாகப் பேசினான். பல பரிசுகளை வழங்கினான். அப்படிப்பட்ட பரிசுகளில் ஒன்று ஒரு மாயக் கண்ணாடி. அதில் எதை விரும்பிப் பார்த்தாலும் அது தெரியும். ஒரு நாள் தன் தந்தை, சகோதரிகளை நினைத்துக் கொண்டு பார்த்தபோது அதில் தந்தை நோய்வாய்ப்பட்டு அநாதரவாகப் படுத்திருப்பதைக் கண்டாள். மூத்த சகோதரிகள் தகப்பனாரை அலட்சியப்படுத்தினார்கள். இதனால் மனம் நொந்த குணவதி அந்தக் குரூபி இளவரசனிடம் ''என் தகப்பனாரைக் காண என் வீட்டுக்குப் போய் வர அனுமதிக்க வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டாள்.

மிருகத்தின் முகம் கொண்ட அரசன் மெதுவான, கனிவான குரலில் அவளைக் கேட்டான்: ''குணவதி! நீ என்னை மணந்து கொள்வாயா?''

''உங்களையா? ஐயோ! நான் மாட்டேன்'' என்றாள் குணவதி பெண்களுக்கே உரிய பீதியுடன். இதனால் அவன் கோபமடையவில்லை. ''சரி... உன் தகப்பனாரைப் போய்ப் பார்த்து வா. ஆனால் எட்டே நாட்களில் இங்கு திரும்பி வந்துவிட வேண்டும்'' என்று விடை கொடுத்தான்.

குணவதி குதூகலத்துடன் தன் தந்தையின் இருப்பிடம் சென்றாள். தன் அருமை மகளைக் கண்ட மகிழ்ச்சியிலே தனதத்தனுக்கு உடல் குணமாகிவிட்டது. குணவதியின் அற்புதமான, விலைமதிப்பற்ற ஆடை அணிமணிகளைக் கண்ட அவள் சகோதரிகளுக்குப் பொறாமையான பொறாமை. புழுங்கிப் போனார்கள். தான் அங்கு வாழும் ராஜ போக வாழ்வை வெள்ளை மனத்துடன் குணவதி சொல்லச் சொல்ல அவர்களுக்கு உடலெல்லாம் எரிந்தது. ''இங்கு நாம் நாளெல்லாம் உழைக்கிறோம். ஒரு சுகம் கிடையாது. அவள் ராணி போல் அங்கு அரண்மனையில் வாழுகிறாள்'' என்றாள் மாணிக்கவல்லி.

''அவளை இங்கேயே நிறுத்திக் கொண்டு விட்டால்? அவள் திரும்பி வராததைக் கண்ட அந்தக் குரூபி கோபித்துக் கொண்டு இவளைத் தண்டிப்பான். ஏன் வெளியே விரட்டினாலும் விரட்டி விடுவான்'' என்றாள் மரகதவல்லி. இருவரும் திட்டமிட்டார்கள். குணவதியைக் குறித்த நாளில் போகாமல் செய்வதென்று. ''நீ வந்ததனாலேயே அப்பாவுக்கு உடல் தேறியது. நீ இப்படி உடனே போனாயானால் உன் நினைவாகவே உயிரை விட்டு விடுவார். கொஞ்ச நாட்கள் இருந்து அவர் நன்றாக எழுந்து நடமாட ஆரம்பித்ததும் போகலாமே?'' என்று நயவஞ்சகமாகப் பேசி அவளைத் தங்கச் செய்து விட்டார்கள். குணவதியும் அவளுடைய வஞ்சனைப் பேச்சில் ஏமாந்து போனாள்.

ஒரு நாள் இரவு குணவதி ஒரு கனவு கண்டாள். அதில் அந்த அவலட்சண முகமுடைய இளவரசன் தோன்றினான். அழகற்றவனானாலும் கம்பீரமான உருவமும் பலமும் பொருந்திய உடலும் கொண்டவன் அவன். அது இப்போது துவண்டு கிடந்தது. அந்த நிலை குணவதியின் மனத்தை வேதனையால் நிரப்பியது. விடியும் நேரத்தில் குதிரையின் மீது ஏறிக் கானகத்து அரண்மனையை நோக்கி விரைந்தாள்.

அரண்மனைத் தோட்டத்திலே ஒரு மலர் மரத்தினடியிலே கனவில் கண்டது போலவே அந்த ஆளவரசன் துவண்டு நினைவிழந்து கிடப்பதைக் கண்டாள். கருணையால், வேதனையால் அவள் உள்ளம் துடித்தது. தன்னிடம் எத்தனை அன்பு காட்டினான் என்பதை எண்ணிய அவளுக்கு அழுகையாக வந்தது. அவன் அருகில் அமர்ந்தாள். குனிந்து அந்த விகாரமான முகத்தில் உள்ளன்புடன் தன் இதழ்களைப் பதித்தாள்.

''இறந்து விடாதீர்கள், என்னைத் தனியே தவிக்க விட்டுப் போய்விடாதீர்கள். உங்களை நான் மனதார நேசிக்கிறேன். இந்த முகம் எப்படி இருந்தால் என்ன? உங்கள் உள்ளம் அன்புமயமானது. அதை நான் அறிவேன்'' என்று விம்மலிடையே கதறினாள். அவள் கண்ணீர் அந்த விகாரமான முகத்திலே விழுந்தது. என்ன ஆச்சரியம்! அடுத்த விநாடி அந்தக் கோரமான முகத்தின் சுருக்கங்கள் மறைந்தன. பனிப் படலம் விலகுவது போல அந்த அழகற்ற தோற்றம் போய், அழகே வடிவாக, கம்பீரமான அரசகுமாரனாக எழுந்து உட்கார்ந்தான் அவன். குணவதிக்கு எப்படி இருக்கும்? அப்படியே அவன் மார்பில் முகம் புதைத்துக் கொண்டாள்.

''உன்னை உள்ளன்போடு யார் காதலிக்கிறார்களோ அவர்களுடைய கண்ணீரினால்தான் என் இந்த அவலட்சணம் மறையும் என்று ஒரு சாபம். உனக்காகவே நான் இத்தனை காலமும் இப்படிக் காத்திருந்தேன்'' என்றான் ரத்னபுரியின் இளவரசனான ரஞ்சித வர்மன். பிறகு என்ன? குணவதி ரத்தினபுரியின் ராணியாகிப் போனாள். ரஞ்சித வர்மனுடன் சுகமாக வாழ்ந்தாள். அவள் தன் தந்தையையும் சகோதரிகளையும் அழைத்துக் கொண்டாள் என்று சொல்லவா வேண்டும்?

காந்தியின் கடிதம்

—மலர் மகன்—

''அன்புத் தந்தை அவர்கட்கு,
அருமைச் சிறுவன் வணக்கங்கள்!
என்பிழை யாவும் உணர்ந்திட்டேன்;
என்னை மன்னித் தருளுங்கள்!

நேரில் உம்மிடம் சொல்லிடவே
நெஞ்சில் துணிவு இல்லாமல்
சீராய் எழுதிப் பணிகின்றேன்;
'சிறுவன்' என்று சினம் வேண்டாம்!

கூடா நட்பால் வெள்ளையர்போல்
கொழுக்கக் கறியைத் தின்றிட்டேன்;
ஆடே என்னுள் கத்துவதாய்
அவதிப் பட்டேன், அழுதிட்டேன்!

புகைக்கும் போற்று ஒழுக்கத்தைப்
புரிந்தேன் சிலநாள், அதனாலே
'சிகரெட்' வாங்கக் காசுக்குச்
சின்னத் தனமாய்த் திருடிட்டேன்!

அண்ணன் பட்ட கடனெல்லாம்
அடைக்க வேண்டி யிருந்ததனால்
பொன்னும் கொஞ்சம் திருடிட்டேன்;
புரிந்தேன் பிழைகள் தெரியாமல்!


தவறுகள் எல்லா வற்றுக்கும்
தற்கொலை வழியென் றெண்ணிட்டேன்,
தவறென் றதையும் கைவிட்டேன்,
தங்கள் அடிகளில் முறையிட்டேன்!

தண்டனை தாங்கள் எதுவேனும்
தாருங்கள் நான் ஏற்கின்றேன்!
தண்டனை தாங்கள் எனக்காகத்
தய்வுடன் அனுபவித் திடவேண்டாம்!''

என்றே திருந்தி எழுதிட்டார்;
எழுதியபடியே வாழ்ந்திட்டார்!
நன்றே சிறந்து நிற்கின்றார்;
நல்லார் நிழலாய் நாமாவோம்!

நல்லவர் தனியாய்ப் பிறப்பதில்லை,
நம்மைப் போன்றே பிறக்கின்றார்;
சில்லறைக் குறைகள் போக்கிட்டால்
சிறந்தவ ராகிச் சீர்பெறலாம்!





ஷீலாவைக் காணோம் 20
கதை: வாண்டுமாமா
சித்திரம்: ரமணி..
டைகரின் வாய்க்கு வலைமூடி போட்டு ஷீலாவுடன் அதையும் இழுத்துக் கொண்டு வெளிவரும் அந்த கொடியவனைக் கண்காணித்தபடியே — இருந்தான் மங்கு. பெட்டிக் கடைக் காரரின் மகன் அவன்.
அந்தப் பெண் அவனுடைய மகளாக இருக்க முடியாது. பின் தொடர்ந்து போய்ப் பார்ப்போம்.
வெகு தூரம் அவனைத் தொடர்ந்து சென்ற பின்...
அப் பெண்ணின் கை கால்களைக் கட்டிப் போடுகிறானே பாவி. நாயையும் கட்டிப் போட்டு விட்டான். இந்தக் குகையா அவன் வீடு?...
எங்கள் திட்டங்கள் எல்லாவற்றையும் குட்டிச் சுவராக்கி வரும் சனியனே, உன்னை இம்முறை கொல்லாமல் விடப் போவதில்லை..
இந்தக் கல்லை வீசி அவன் கவனத்தைத் திருப்பி நாயைக் கீழே விடச் செய்ய முடியுமா பார்ப்போம்.
மங்குவின் முயற்சி பலித்தது. புதரில் கல் விழுந்த சப்தம் கேட்டதும் டைகரைக் கீழே கிடத்தி விட்டுக் கைத் துப்பாக்கியுடன்..
யார் அது? எங்கே ஒளிந்திருக்கிறாய்? வா, வெளியே.
நல்ல வேளை, பையில் பெருக் கத்தி இருந்தது. நாய்க்கு விடுதலை யளிப்போம்.


விடுபட்ட டைகர் ஒரே தாவலில் அக் கொடியவன் மீது பாய்ந்தது.
நீ இவனைக் கவனித்துக் கொள். நான் உன் தோழியைப் போய் விடுதலை செய்கிறேன்.
பயப்படாதே. அந்த ஆளிடமிருந்து தப்பி ஒளிந்து கொள்ள ஒரு அருமையான இடத்தைக் காட்டுகிறேன். உன் பெயர் என்ன? என் பெயர் மங்கு.
என் பெயர் ஷீலா. என் டைகர் எங்கே
பெட்டிக் கடைக் காரர் தன் மகனைக் காணாமல் தேடி வருகிறார்.
எங்கு போயிருப்பான் மங்கு. சரக்கு பிடிக்கச் சந்தைக்குப் போகணும். கடையை கவனித்துக் கொள்ளாமல் எங்கே ஓடி விட்டான்?
கடைக்காரர் கடத்தல் காரனைச் சந்திக்கிறார்.
உங்கள் பையன் செய்த வேலையைப் பாருங்கள். அந்தப் பெண்ணை தப்பி ஓட உதவி இருக்கிறான். இரண்டு பேரையும் காணோம்.
அப்படியா சேதி? இருக்கட்டும். கவலைப் படாதீங்க. இன்னும் இரண்டு பேரோட வரேன். தேடிக் கண்டு பிடிச்சுடலாம்.
அதோ மரத்து மேலே பாரு ஒரு வீடு. ஒளிஞ்சுக்க ரொம்பச் சுகமான இடம். இப்படி ஒரு இடம் இருப்பது அதிகமா யாருக்கும் தெரியாது. ரொம்ப நாளைக்கு முந்தி ஒரு வெள்ளைக்காரர் வன விலங்குகளை ஆராய இங்கு வந்திருந்தார். அவருக்காக அமைத்த மர வீடு இது. வா அதுக்குள்ளே போய் மறைஞ்சுக்கலாம்.
தொடரும்...

உழைக்கும் கரங்கள்



கூடை முடைந்து....



கொழுந்து விற்று....

விளையாடி....



சாத்திரம் எழுதி....



புகைப்படங்கள் :
ஞானலிங்கம்



தேய்த்து....



அரைத்து....

....பொம்மை வண்டி செய்து





சொகுசுக் கூடை பின்னி ஓய்ந்துவரும்
உழைப்பாளிகளுக்கு இதோ
சோறு ரெடி!



புதுமையிலும் புதுமை!

காஞ்சீபுரம், தர்மாவரம், பனாரஸ்,
பட்டுச்சேலை & பாவாடைகளில்

எமது புதிய தயாரிப்புகள்!
நெஞ்சை அள்ளும் நேர்த்தியான புதிய நிறுவுகள்!!



- சந்தோஷ்
- பூர்ணிமா
- கோல்டன் சன்
- பெமினா

மற்றும் கட்டங்கள்
கவர்ச்சிமிக்க
வண்ணங்களில்

ஸ்ரீ ராஜேஸ்வரி ஹால்


121, ராஜ வீதி கோயமுத்தூர்-1

கிளை நிறுவனங்கள்:
o கடை வீதி,
சேலம்-1
o காந்தி ரோடு,
காஞ்சீபுரம்-1

தயாரிப்பு நிலையம்: ஸ்ரீ ராஜேஸ்வரி சில்க்ஸ் காஞ்சீபுரம்-1

O.S.R

இச்சிறுமி வளர்வதற்கு
நீண்டகாலமாகும்போல்
தோன்றுகிறது



ஆனல் காலம் காற்றுய்ப் பறக்கிறது

இன்றே ஒரு ஸேவிங்ஸ் பாங்க் கணக்குத் தொடங்குங்கள்

அலகாபாத் பாங்கிற்கு வந்து எங்களில் யாரிடமாவது கேளுங்கள் ரு. 5 மட்டும் செலுத்தி, உடனே ஒரு சேமிப்புக் கணக்குத் தொடங்கி விடலாம். அவ்வளவு சுலபம். நீங்கள் ஒழுங்காகச் சேமித்து வரும் சிறு தொகை எவ்வளவு சீக்கிரமாகப் பெருகி வருகிறது என்று ஆச்சரியப்படுவீர்கள். இன்னும் சௌகரியங்கள், சேவைகள் ......


• செக்கரிங் டிபாஸிட்டுகள் • கரண்ட் அக்கௌண்ட் • பிரயாணிகள் செக்குகள் • பிக்ஸட் டிபாஸிட்டுகள் • ஸேப் டிபாஸிட் லாக்கர்கள் • விவசாயத்திற்கான பணவசதி • சிறு தொழில்களுக்கு கடனுதவி
• உத்தியோகஸ்தர்களுக்குக் கடனுதவி

அலஹாபாத் பாங்க்
ஹெட் ஆபீஸ்: 14, இந்தியா எக்ஸ்சேஞ்ச் பிளேஸ்,
கல்கத்தா-1

நீங்கள் தாராளமாகப் பழகுவதற்குரிய தென்று உணர்த்துகிறோ...


புட்டோவைப் போட்டுப் பாருங்கள்!

— தாணு



அடுத்த இதழில் யார்?

ஒரு நாளில்.....



நல்ல ஆரோக்கியமான ஒரு சராசரி மனிதன் இருபத்தி நான்கு மணி நேரத்தில்......

அவனது இதயம் 1,00,000 தடவைகள் துடிக்கும் 3000 காலன்கள். ரத்தத்தை ('பம்ப்' செய்து) உள்ளுக்கு வாங்கி வெளியே அனுப்புகிறது. 23,000, தடவைகள் சுவாசிக்கிறான். 400 க்யூபிக் அடிகள் காற்றைச் சுவாசிக்கிறான். அதிலிருந்து 20 க்யூபிக் அடிகள் பிராண வாயுவை எடுத்துக் கொள்கிறான். 3 பவுண்டு உணவை உட்கொள்ளுகிறான். 3 பிண்ட் திரவத்தைக் குடிக்கிறான். வியர்வை மூலமாக ஒன்றரை பிண்ட் தண்ணீரை வெளி விடுகிறான். தூங்கும் போது முப்பது தடவைகள் புரளுகிறான். அவனது நகம் ·000046 அங்குலமும் கேசம் ·01714 அங்குலமும் வளருகின்றன. 5000 வார்த்தைகள் வரை பேசுகிறான். (இது பெண்களுக்குப் பொருந்தாது!)


மூளையைப் பற்றி



நன்கு வளர்ந்த மனிதனுடைய மூளையின் நிறை 3½ பவுண்டுகள். கொரில்லாக் குரங்கின் மூளையின் நிறை 1-1/3 பவுண்டுகள். யானைக்கு? அதன் உடல் நிறையைப் பொறுத்துத்தான் அதன் மூளையின் நிறை. யானையின் உடல் நிறை 1000 பவுண்டானால் அதன் மூளையின் நிறை 10 பவுண்டு. நீலத் திமிங்கிலம் யானையைப்போல் இருபத்தைந்து மடங்கு நிறை உடைய பிராணி. ஆனால் அதன் மூளை யானையுடையதைப்போல் இரு மடங்குதான். அதாவது இருநூறு பவுண்டுகள். நாயினுடைய மூளையின் நிறை ஆறு அவுன்ஸ்கள். பூனைக்கு ஒரு அவுன்ஸ். குதிரை மூளை 20 அவுன்ஸ்கள் நிறையுடையது.

சாதாரண மனிதன் தனது மூளையைப்போல நாற்பது மடங்கு நிறையுடையவனாக இருப்பான். காட் என்று ஒரு வகை மீன் கேள்விப் பட்டிருப்பீர்களே. அதன் நிறை என்ன தெரியுமா? அதன் மூளையின் நிறையைப்போல 5000 மடங்கு! சரித்திர காலத்துக்கு முற்பட்டதாகக் கருதப்படும் புராண்டாசரஸ் என்ற ஒரு வகைப் பல்லியின் நிறை 35 டன்கள். ஆனால் அதன் மூளையின் நிறை என்ன தெரியுமா? ஒரே ஒரு பவுண்டுதான். நல்ல வேளை இந்த புருசரஸ் இப்போது பூமியில் இல்லை. ஒரு மனிதனின் மண்டையோட்டினுள் மூளை எத்தனை இடத்தை ஆக்கிரமித்துக் கொண்டுள்ளது தெரியுமா? உத்தேசமாக 1300 க்யூபிக் சென்டி மீடர் இடத்தை. மூளை விஷயங்கள் மூளையை ரொம்பக் குழப்புகின்றனவா? அப்படியானால் இத்துடன் போதும்!

பூமியைப் பற்றி



பூமியின் குறுக்களவு பூமத்திய ரேகையில், 7,926.68 மைல்கள். சுற்றளவு அதே இடத்தில் 24,902.39 மைல்கள். துருவத்துக்குத் துருவம் பூமியின் குறுக்களவு 7,900.00 மைல்கள். துருவங்கள் வழியாகச் சுற்றளவு 24,860·49 மைல்கள் பூமியின் பரப்பளவு 19,69,50,284 சதுர மைல்கள். பூமியின் கன பரிமாணம் எவ்வளவு தெரியுமா? 259,000,000,000 க்யூபிக் மைல்கள் பூமியின் நிறை 6,588,000,000,000,000,000,000, டன்கள்! பூமி தன்னைத் தானே ஒரு முறை சுற்றிக் கொள்ள ஆகும் நேரம் 23 மணிகள் 56 நிமிஷங்கள். 4.09 விநாடிகள். சூரியனைச் சுற்றிவர— 365 நாட்கள் 6 மணிகள், 9 நிமிஷங்கள், 9.5 விநாடிகள்.

தெரிந்துக்கோ!

யானைக்கு ஆன வயது என்ன ?

சென்னையில் உள்ள மிருகக்காட்சிச் சாலைக்கு ஓர் ஆங்கிலேயர் கடிதம் எழுதினார்: ''உங்கள் காட்சிச்சாலையில் உள்ள யானைகளுக்கு என்ன வயது என்று சொல்ல முடியுமா ?''

''அவைகளுக்கு எழுபது முதல் நூறு வயது வரையில் ஆகிறது'' என்று பதில் எழுதினார் அந்த அதிகாரி. ஸர் வில்லியம் பிளவர் என்ற அந்த ஆங்கிலேயருக்கு ரொம்ப ஆச்சரியம். ''எப்படி யானையின் வயதை நீங்கள் கண்டுபிடிக்கிறீர்கள்?'' என்று எழுதிக் கேட்டார்.

''யானையின் காதில் மேல் மடிப்பைத் திருப்பி மடியுங்கள். ஓர் அங்குலம் மடிந்தால் கிட்டத்தட்ட முப்பத்தாறு வயது. இரண்டு அங்குலம் மடிந்தால் சுமார் அறுபது வயது. இப்படிக் கணக்குப் போட்டுக் கொள்ளலாம்'' என்று பதில் எழுதினார்.

எவ்வளவு வேடிக்கையான வழி?

காட்டு மிருகங்களின் வயதைக் கண்டுபிடிப்பதோ, எவ்வளவு வயது வரையில் அவை உயிர் வாழலாம் என்று சொல்வதோ கடினம். ஏன்? இயற்கையான காடுகளில் வாழும்போது அவைகளின் சூழ்நிலை வேறு. மிருகக் காட்சிச்சாலையில் வைத்து வளர்க்கும்போது இருக்கும் நிலை வேறு. கொரில்லாக் குரங்கு போன்ற சில மிருகங்களைக் காட்சிச்சாலைகளில் வைத்து வளர்ப்பது சிரமம். பசிபிக் பகுதிகளில் வாழும் சில பெரிய பல்லிகளைப் பிடித்து வைத்து வளர்க்கவே முடியாது.

காட்சிச்சாலையில் உணவும், பாதுகாப்பும் கொடுத்து அலையாமல், திரியாமல் பார்த்துக் கொண்டால் மிருகங்கள் அதிக காலம் உயிர் வாழ்கின்றன. யானைகள் சுமார் ஐம்பது முதல் நூறு வயது வரையில் உயிர் வாழும். சிங்கங்கள் இருபத்தைந்து முதல் நாற்பது வயது வரையில் உயிரோடு இருக்கும். புலிக்குப் பதினைந்து வயது வரை வாழும் சக்தி உண்டு. ஒரு சில பத்தொன்பது வயது வரையில் வாழ்ந்து 'ரிகார்டு' வைத்திருக்கின்றன!

இத்தகைய காட்டு மிருகங்களுக்கு முக்கியமானது பல். வாயில் பல் நன்றாக முளைத்த பிறகுதான், இவை தங்கள் இரையை நன்கு சாப்பிட முடியும். வயதாக ஆக இந்தப் பற்கள் தேய்ந்து விழுந்து விடுகின்றன. அப்புறம் அதனால் சாப்பிட முடிவதில்லை. இரையைத் துரத்தி ஓடவும் முடிவதில்லை. கொஞ்சம் கொஞ்சமாகப் பட்டினி கிடந்து உயிர் விடுகின்றன.

திமிங்கிலம் நூறு வயதுக்குமேல் வாழுகிறது. சிலர் அது ஐந்நூறு வயது வாழும் என்று சொல்கிறார்கள். ஆனால் இதற்குத் திட்டமான ஆதாரம் இல்லை. மிகவும் நீண்ட காலம் வாழ்வது எது தெரியுமா? மிகவும் மெதுவாக நகர்ந்து செல்லும் ஆமைதான்! முந்நூறு வயதுக்குமேல் வாழுமாம் அது! முதலைக்கும் ஆயுசு கெட்டி! மிகவும் குறைந்த காலம் உயிரோடு இருக்கும் காட்டு மிருகம் நரி. அதிகபட்சம் அது வாழ்வது எட்டு ஆண்டுகள்தாம்.


வீட்டில் வாழும் மிருகங்களுக்கு, பிற மிருகங்கள் அவற்றோடு சண்டை போட்டுக் கொல்லும் அபாயம் இல்லை. அவற்றுக்குத் தயார் செய்த உணவு கிடைக்கிறது. நாய் பதினைந்து வயதுவரையில் வாழும். ஆனால் பத்து வயதிலேயே கிழடு தட்டிப்போய்ப் படுத்துக்கொண்டு விடுகிறது. பூனை பதினைந்து வயதும், பசு இருபத்தைந்து வயதும் வாழும். குதிரை இருபத்தைந்து முதல் முப்பது வயதுவரை வாழும். ஆனால் அது சுறுசுறுப்பாக ஓடியாடுவது எட்டு முதல் பதினைந்து வயதுவரையில்தான்.

ஆடுகள் பத்து முதல் இருபத்தைந்து வயதுவரையில் வாழும். ஆனால் அது முழுவதும் வாழ மனிதர்கள் விட்டு வைப்பதில்லையே! முயலும் எலியும் ஐந்து வயதுவரையில் வாழும். உங்கள் வீட்டில் பெட்டிக்கு அடியில் எதையாவது தேடும்போது வெளியே ஓடுகிறதே, அந்தக் கரப்புக்கு என்ன ஆயுசு தெரியுமா? மூன்று ஆண்டுகள். மிகக் குறைந்த ஆகாரத்தோடு மாதக் கணக்கில் உயிர்வாழும் சக்தி அதற்கு உண்டு. உலகத்தின் பழைமையான உயிரினங்களில் ஒன்று அது!

— 'லட்சுமி'



முதுமலையில் யானைக் கூட்டம்



யார் புத்திசாலி?

ஆர். வே. ராமசாமி

மகேந்திரபுரியின் மன்னர் மகேந்திர பூபதிக்கு நீண்ட காலமாகக் குழந்தை இல்லாமல், தானம் தவமெல்லாம் செய்து அருமையாக ஓர் ஆண் குழந்தை பிறந்தது.

குழந்தை பிறந்த வைபவத்தை மகிழ்ச்சியுடன் கொண்டாடத் தம் ஆட்சிக்குட்பட்ட பாளையக்காரர்களுக்கெல்லாம் அழைப்பு அனுப்பினார் மன்னர்.

குழந்தையின் ஜாதகத்தைக் கணித்த அரண்மனைச் சோதிடர், ''குழந்தை, பிற்காலத்தில் பெரும் வீரனாக விளங்குவான். அத்துடன் மிகுந்த புத்திசாலியாகவும் இருப்பான்'' என்றார்.

அந்தச் சமயத்தில், சிலர் தங்கள் பிள்ளைகளின் வீரத்தையும் புத்திசாலித்தனத்தையும் பற்றிப் புகழ்ச்சியாகப் பேசிக் கொண்டார்கள்.

இந்தப் பேச்சு, மன்னர் மகேந்திர பூபதியின் காதில் விழுந்தது. அவர் சிரித்துக் கொண்டே, ''விழா கொண்டாடும் இந்த நாளில், போட்டி ஒன்று வைத்து எந்தப் பாளையக்காரரின் பிள்ளை புத்திசாலி என்பதைத் தெரிந்து கொண்டால் போயிற்று!'' என்றார்.

''ஆமாம். அது சரியான யோசனைதான்! எல்லோரும் வேடிக்கை பார்த்தது போலவும் இருக்கும்!'' என்று பலரும் மகிழ்ச்சியுடன் ஆதரித்தார்கள்.

அன்று மாலையே இந்தப் போட்டி ஏற்பாடாயிற்று. ஒரே ஜனத்திரள்.

போட்டியை முன்னின்று நடத்தியவர் மகேந்திரபுரியின் அமைச்சர்தான். அவர் சுமார் நான்கு அடி உயரத்தில் சந்தன மரத்தில் செதுக்கப்பட்ட ஓர் அழகிய பெண் சிற்பத்தைக் கொண்டு வந்தார்.

மூன்று பாளையக்காரர்களின் குமாரர்களை அழைத்தார். மூவரும் வந்தார்கள்.

அமைச்சர் சற்று உரத்த குரலில் கூறலானார்:

''பெரியோர்களே! மகேந்திரபுரிக்கு ஒரு வாரிசு கிடைத்தது பற்றி மகிழ்ச்சியுடன் இருக்கும் இந்தச் சமயத்தில் நாம் ஒரு போட்டியை ஏற்படுத்தியிருக்கிறோம். இம்மூன்று பாளையக்காரர்களின் பிள்ளைகளில் யார் புத்திசாலி என்பதைத் தீர்மானிக்க, வில் வித்தையில் கெட்டிக்காரர்களான இவர்களுக்குத் தகுந்த போட்டிதான் இது. கவனியுங்கள். இங்கே நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் இந்தச் சந்தன மரச் சிலையின் வலக் கண்ணில் விமலனும் இடக் கண்ணில் பார்த்திபனும், சிலையின் மூக்கில் மாறத்தேவனும் குறி தவறாமல் அம்பு எய்ய வேண்டும்'' என்றார்.

மக்கள், போட்டியை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

''போட்டியில் கலந்து கொள்ளும் மூன்று பிள்ளைகளும் சந்தன மரச் சிலையின் அருகில் சென்று, சிலையை நன்றாகப் பார்த்துவிட்டு மறுபடியும் தங்கள் இடத்துக்கு வரலாம்'' என்றார் அமைச்சர்.

மூவரும் சிலையின் அருகில் சென்று, தங்களுக்கு எந்த இலக்கு என்பதைப் பார்த்துக் கொண்டார்கள்.

போட்டி ஆரம்பமாயிற்று.

முதலாவதாக விமலன் வந்தான். அவன் சந்தன மரச் சிலையின் வலக் கண்ணைப் பார்த்து அம்பெய்ய வேண்டும். அவன் சிலையைக் கவனமாகப் பார்த்துக் கொண்டே வில்லில் அம்பைப் பொருத்தினான். இதோ, அவனது அம்பு ஜிவ்வென்று பாயப் போகிறது.

மக்கள் கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

''நிறுத்து! நீ அம்பெய்ய வேண்டாம்!'' என்று கத்தினார் அமைச்சர்.

விமலனுக்கு ஒன்றும் புரியவில்லை, கூட்டத்தினருக்கும் ஒன்றும் புரியவில்லை. ஆனால், அமைச்சர், ஏன் எதற்கு என்ற காரணத்தையும் சொல்லவில்லை. அவர் சொன்னால் கீழ்ப்படிய வேண்டியதுதானே! எனவே, விமலன் அரங்கத்தை விட்டு வெளியே வந்தான்.

அடுத்து, பார்த்திபன். அவன் இலக்கு சிலையின் இடக் கண், அவன் அரங்கத்துக்குள் வந்து நின்றான். சிலை

யைச் சிறிது நேரம் உற்றுக் கவனித்தான். தயங்கினான். பிறகு, ''நான் இப்போது அம்பெய்ய விரும்பவில்லை'' என்றுசொல்லிவிட்டு வெளியேவந்தான்.

தொடர்ந்து. 'ஓஹோ !' என்ற சிரிப்பொலி எழுந்தது.

மூன்றாவதாக மாறத் தேவன் வந்தான். அவன் வில்லில் அம்பைப் பொருத்தி நாணை இழுத்துச் சிலையின் மூக்கை நோக்கிக் குறி வைத்தான்.

''மாறத் தேவா, நிறுத்து!'' என்றார் அமைச்சர்.

கூடியிருந்தவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. அமைச்சர் மேல் அவர்களுக்குக் கோபமும் வந்தது.

''போட்டி என்னவாயிற்று?'' என்று கத்தினார்கள்.

''அமைதி, அமைதி !'' என்ற அமைச்சர், விளக்கம் கொடுக்க ஆரம்பித்தார் :

''பெரியோர்களே, இப்போது நடத்திய இந்தப் போட்டியில் வென்று, தானே புத்திசாலி என்று நிரூபித்தவன் பார்த்திபன்தான் என்று நான் நினைக்கிறேன். நீங்களும் அதை ஒத்துக் கொள்ளுவீர்கள் !''

உடனே, ''போட்டியே சரியாக நடக்கவில்லையே! அவர்களை அம்பெய்ய விடவே இல்லையே நீங்கள் ! இந்த முடிவு எப்படிச் செய்யப்பட்டது ?'' என்று கூச்சல்கள் கிளம்பின.


''பார்த்திபன் வில்லைக்கூடக் கையால் தொடவில்லையே, அவன் எப்படி வென்றவனாவான்?'' என்றும் சிலர் கத்தினார்கள்.

''பார்த்திபன் நல்ல புத்திசாலி என்பதால்தான் அவன் வில்லையும் அம்பையும் தொடவில்லை என்பது என் ஊகம். அவன் ஏன் அம்பெய்ய விரும்பவில்லை என்பதை அவனே சொல்லப் போகிறான். அதன் பிறகு என் முடிவு சரிதான் என்பதை நீங்களே புரிந்து கொள்ளுவீர்கள்!'' என்றார் அமைச்சர்.

பார்த்திபன் சொன்னான்:

''சபையோர்களே, வணக்கம். நான் சந்தன மரத்திலே செதுக்கப்பட்ட இந்தச் சிலையை உற்றுக் கவனித்தேன். சிற்பி, அதை மிகத் திறமையாக, கலை நுணுக்கத்துடன் செதுக்கியிருப்பதைக் கண்டேன். அதைச் செதுக்கி முடிக்கவே ஒரு மாதத்துக்கு மேல் ஆகியிருக்கும். அப்படிப்பட்ட கலையம்சம் நிறைந்த சிலையை யாராவது அம்பெய்து சிதைக்கச் சொல்லுவார்களா என்ற ஓர் எண்ணம் எழுந்தது எனக்கு. எனவே, இது நம் திறமையைச் சோதிக்கும் போட்டியல்ல, புத்தியைச் சோதிக்கும் போட்டிதான் என்று எண்ணினேன். புத்தியுள்ள எவனும் இந்த அற்புதமான சிலையைப் பின்னப்படுத்த நினைக்க மாட்டான். ஆகையால் இது புத்தியைச் சோதிக்கவே செய்யப்பட்ட ஏற்பாடு என்பதைப் புரிந்து கொண்டேன். அதனால்தான் நான் அம்பைப் பயன்படுத்தவில்லை.....!''

''அபாரம்! அபாரம் ! பார்த்திபன்தான் மிகவும் புத்திசாலி! பார்த்திபன் வாழ்க !'' என்று குரல் எழுப்பித் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டார்கள் மக்கள்.





விசித்திர உலகம்

இது எவ்வளவு விசித்திரமான உலகம்! நம் கண்ணைக்கூட நாம் நம்ப முடியாது. தினம் காலையில் சூரியன் கிழக்கில் உதிக்கிறது. மாலையில் மேற்கில் அஸ்தமிக்கிறது. சூரியனின் முக்கியத்துவத்தை நமது முன்னோர் அறிந்தனர். சூரியனிடமிருந்தே ஒளியும், உஷ்ணமும் நமக்குக் கிடைக்கிறதென்று உணர்ந்தனர். அதனால் காலை, நடு வேளை, மாலை மூன்று சமயங்களிலும் காயத்ரி என்ற மந்திரத்தால் சூரியனைப் பூஜிக்க வேண்டும் என்று ஏற்பாடு செய்தனர். அதன் அர்த்தம் ''எங்கும் அதன் ஜோதி பரவியுள்ளது. ஒளிமயமான கதிரவனை வணங்கிப் போற்றுவோம். ' நமது மனத்தை அவன் பிரகாசிக்கச் செய்க'' என்பது.

சூரியனின் பெருமையை ஓரளவு உணர்ந்தபோதிலும், அது பூமியை விடச் சிறியதாகவும், பூமியைச் சுற்றி வருவதாகவுமே எண்ணினர். சந்திரனும் ஏறக்குறைய அதே வடிவமாக இருப்பதால், உஷ்ணம் இல்லாவிட்டாலும் சூரியனைப் போலவே பிரகாசமான ஜோதியென்றும் தினசரி பூமியைச் சுற்றி வருகிறதென்றும் நினைத்தனர். இதையெல்லாம் இக்காலத்திய விஞ்ஞானிகள் புதிய கருவிகளையும் கணக்குகளையும் கொண்டு அடியோடு மாற்றிவிட்டனர்.

பூமி உலகத்தின் கேந்திரமில்லை. வட்டமான ஒரு சிறிய கிரகம். அதன் குறுக்களவு 8,000 மைல்கள், சுற்றளவு 24,000 மைல்கள். நல்ல ஜெட் விமானம் பூமியை 30, 40 மணி நேரத்தில் சுற்றி வந்துவிடும். சமீபத்தில் அமெரிக்கர்களும், ருஷியர்களும் செலுத்திய வானவெளி ராக்கெட்டுகள் தினம் பன்முறை பூமியைச் சுற்றி வந்தன.

சூரியனின் பெருமை பன்முறை பெருகிவிட்டது. அதுவே சூரிய குடும்பத்தின் எஜமான். அதில் ஒன்பது அங்கத்தினர்; புதன், வெள்ளி, பூமி, செவ்வாய், வியாழன், சனி, யுரேனஸ், — நெப்டியூன், ப்ளூடோ. கடைசியான மூன்று கிரகங்களும் சென்ற இருநூறு வருஷங்களுக்குள்தான் கண்டு பிடிக்கப்பட்டன. இதர கிரகங்கள் ஆதிகாலத்திலிருந்து அறியப்பட்டவை. நமது நாட்களின் பெயர்கள் அவற்றைக் குறிக்கின்றன.

இந்தக் குடும்பத்தில் சந்திரன் அடங்கவில்லை என்று கவனித்திருப்பீர்கள். உண்மையில் சந்திரன் பூமிக்குச் சொந்தமான ஒரு சிறிய கிரகம். கோடிக்கணக்கான வருஷங்களுக்குமுன் பூமியின் ஒரு பாகம் ஏதோ காரணத்தால் பிரிந்து, அதனைச் சுற்றி வரும் சிறு கிரகமாகிவிட்டது. முன்கூறிய

ராக்கெட்டுகளை மிகச் சிறிய சந்திரன்கள் என்று கூறலாம்.


இந்தக் குடும்பத்தின் தலைவனை சூரியனைப் பற்றிய சில விவரங்களை அறிந்தால் அதன் பெருமை வெளிப்படும். அது ஒரு பிரம்மாண்டமான கோளம். அதன் குறுக்களவு பூமியின் குறுக்களவைப் போல் 109 மடங்கு. கன அளவு பத்து லட்சம் மடங்கு. அதன் வெளிப்புறத்து உஷ்ணம் 11,000 டிகிரி. நமது உடலின் உஷ்ணம் 98 டிகிரி; ஜலம் 212 டிகிரியில் பொங்கி ஆவியாகிறது என்பதை எண்ணினால் சூரியன் அருகில் இரும்பு முதலிய உலோகங்கள்கூட ஆவியாகாமல் இருக்க முடியாதென்று விளங்கும். சூரியனின் மத்தியில் 40 லட்சம் டிகிரி உஷ்ணம். இந்த உஷ்ணத்தைக் கொண்டே தனது குடும்பத்துக்கு வேண்டிய சக்தியைக் கொடுத்து வருகின்றது. அதிலிருந்து பூமிக்குக் கிடைக்கும் வெப்பம் மிகச் சிறிது. ஆயினும் கோடையில் அதை நமக்குச் சகிப்பது கஷ்டமாக இல்லையா?

சூரியனுக்கும் பூமிக்கும் நடுவில் உள்ள தூரம் ஒன்பது கோடியே முப்பது லட்சம் மைல். ஒரு சூரிய கிரணம் பூமிக்கு வந்து சேருவதற்கு எட்டு நிமிஷங்கள் பிடிக்கின்றன. இவ்வுலகிலேயே மிக வேகமாகச் செல்லுவது ஒளிக் கிரணங்களே. ஒரு செகண்டுக்கு ஏறக்குறைய இரண்டு லட்சம் மைல்கள் பாய்கிறது.

சூரியனிடமிருந்து ஒரு கிரணம் புறப்படுகிறது என்று வைத்துக் கொள்வோம். அது மூன்றரை நிமிஷங்களில் புதனைக் கடக்கும். ஆறு நிமிஷங்களில் வெள்ளியைக் கடந்து எட்டு நிமிஷங்களில் பூமியைச் சேரும். அமாவாசையாக இருந்தால் ஒரு செகண்ட் முன்னதாகவும், பௌர்ணமியானால் ஒரு செகண்ட் பின்பும் சந்திரனைக் கடக்கும். பன்னிரண்டு நிமிஷங்களில் செவ்வாயைத் தாண்டிச் செல்லும். அதற்குப் பின் வியாழனைச் சேருவதற்கு அரை மணி பிடிக்கும். சனிக்கு மேலும் அரை மணி அதிகமாகும். புறப்பட்டு இரண்டரை மணிக்குப் பின்னர் உரேனஸ் கிரகத்தையும், 4 மணிக்குப் பின் நெப்டியூனையும், 5½ மணிக்குப் பின் கடைசிக் கிரகமான ப்ளுடோனவையும் சந்திக்கும். இவ்விதம் சூரிய மண்டலத்தின் எல்லையை ஆறு மணி நேரத்துக்குள் அடைந்துவிடும். அங்கிருந்து மேலே சென்றால் நான்கு வருஷங்களுக்குப் பின்னரே வேறு ஒரு நக்ஷத்திரத்தினருகில் செல்லும். ஆறு மணி நேர தூரத்துக்கும் நாலு வருஷ தூரத்துக்கும் நடுவில் வெறும் ஆகாசமே உள்ளது.

சூரியனைப் போலவே நட்சத்திரங்களுக்கும் குடும்பங்கள் உண்டு. நட்சத்திரங்கள் ஜோதி மண்டலங்களாக அமைந்திருக்கின்றன. நமது சூரியன் இருக்கும் மண்டலத்துக்கு ஆங்கிலத்தில் மில்கி வே (Milky way) என்று பெயர். பால் மண்டலம் என்று தமிழில் கூறலாம். அமாவாசை இரவுகளில் பார்த்தால் ஒரு வெண்மையான மண்டலம் தென்படும். உண்மையில் அது கோடானு கோடி நட்சத்திரங்கள் கொண்டது. பால் மண்டலத்தின் கோடிக்குப் போவதற்கு ஒரு லட்சம் வருஷங்கள் வேண்டும். வானத்தின் பரப்பு நமது கற்பனைக்கு அப்பாற்பட்டது.

சூரியக் குடும்பத்தின் தலைவனை சூரியன் ஒன்றுக்கே ஒளியுண்டு. அந்த ஒளியினாலேயே சந்திரனும் மற்ற கிரகங்களும் பிரகாசிக்கின்றன. பூமியை விடச் சூரியனுக்கு அருகில் இருக்கும் புதன், வெள்ளி கிரகங்களின் பகல் வெப்பத்தை ஜீவராசிகளால் தாங்க முடியாது. அப்பாலிருக்கும் கிரகங்களில் உயிர் வாழப் போதிய வெப்பம் இல்லை. ஆதலால் பூமியைத் தவிர சூரிய மண்டலத்தில் வேறெங்கும் உயிர் இருக்கிறதா என்பது சந்தேகம். அப்படியே இருந்தாலும் பாசி போன்ற செடி வகைகளே இருக்கக் கூடும் என்று விஞ்ஞா



விகள் வாழக்கின்றனர். தோற்றத்தில் நம்மைப் போல் இல்லாமல், நாம் சிந்திக்க முடியாத முறையில் உருவம் படைத்த பிராணிகளோ, மனிதர்களோ இருக்க முடியாதென்று சொல்லுவதற்கில்லை. ஆனால், அதற்கு ஆதாரமான அறிகுறிகள் இதுவரையில் கிடைக்கவில்லை.

சூரிய குடும்பத்தை ஒரு நர்த்தன கோஷ்டிக்கு ஒப்பிடலாம். ஒவ்வொன்றும் தட்டாமாலை சுற்றுவதுபோல் ஓயாமல் சுழலுகின்றது. ஒவ்வொரு கிரகமும் சூரியனைச் சுற்றி வலம் வருகின்றது. ஆனால் சுழலும் நேரமும், சூரியனைச் சுற்றும் காலமும் வெவ்வேறாகத்தான் இருக்கின்றன.

பூமி சுழலும் காலத்தை நாம் ஒரு நாள் என்கிறோம். மேற்கிலிருந்து கிழக்குப்புறமாகச் சுழலுகின்றது. ஆதலால் சூரியன், நட்சத்திரங்கள் எல்லாம் கிழக்கிலிருந்து மேற்கே போவதுபோல் காணப்படுகின்றன.

365 நாட்களில் பூமி சூரியனை வலம் செய்கின்றது. அதை ஒரு வருஷம் என்கிறோம். வருஷம், மாதம், நாள் முதலிய காலப் பிரிவுகள் நமது பூமியின் போக்குகளை ஆதாரமாகக் கொண்டே அமைக்கப்பட்டிருக்கின்றன. மற்றக் கிரகங்களுக்கு இவை பொருந்த மாட்டா.

ஒரு மனிதன் சந்திரனில் இருந்தால் அவனுக்கு ஒரு மாதம் ஒரு நாளாக இருக்கும். சந்திரன் ஒரு தடவை பூமியைச் சுற்றி வருவதற்கும், தான் சுழலுவதற்கும் ஒரே காலமாகும். ஆதலால் நமது மாதமும் சந்திர தினமும் ஒன்றாக இருக்கும்.


சூரியன் தன்னைத் தானே ஒரு முறை சுற்றிக் கொள்ள 25½ நாட்களாகின்றன. அது வேறு எந்தக் கோளத்தையும் சுற்றுவதில்லை.

பூமி 365 நாட்களில் சூரியனைச் சுற்றுகின்றது. அதன் பாதை சரி வட்டமாக இல்லை. நீள வட்டமாக இருக்கிறது. அதனால் சில காலங்களில் சூரியன் சிறிது அருகிலும், மற்றக் காலங்களில் சிறிது விலகியும் இருக்கும். மேலும் இந்த வட்டத்தில் சாய்ந்தாற்போல் சூரியனைப் பூமி வலம் வருகின்றது. அதனால் சூரிய கிரணங்கள் சில சமயம் நேராகவும் மற்றக் காலங்களில் சாய்ந்தும் பூமியைத் தாக்குகின்றன. நேராகத் தாக்கும்பொழுது கோடை காலமாகி வெப்பம் அதிகமாகவிருக்கிறது. சாய்ந்திருக்கும் பொழுது பனி காலமாகிறது. ஆனால் பூமியில் எல்லாப் பாகங்களுக்கும் ஒரே சமயத்தில் இக் காலங்கள் இருப்பதில்லை. அதன் மத்திய ரேகை (ஈகுவடார்)க்கு வடக்கே கோடையானால் தெற்கே குளிர் காலமாகும். மத்திய ரேகைக்கு அருகில் இருக்கும் பிரதேசங்களுக்கு சீதோஷ்ணம் ஏறக்குறைய எப்பொழுதும் ஒரே சமமாக இருக்கும். சென்னை சிறிது வடக்கே இருக்கிறது. டில்லி அதைவிட அதிக வடபுறமானதால் கோடையில் தில்லியில் அதிக வெப்பமாகவும், பனிக் காலத்தில் குளிர் அதிகமாகவும் இருக்கிறது.

சந்திரன் 28 நாளைக்கு ஒரு முறை பூமியைச் சுற்றுகிறது. அது பூமிக்கும் சூரியனுக்கும் நடுவில் வரும் பொழுது அமாவாசை இருட்டு. ஏனென்றால் சூரியனோடு உதித்து அஸ்தமிக்கிறது. எதிர்ப்புறத்தில் இருக்கும் பொழுது சூரியன் அஸ்தமிக்கும் பொழுது உதித்துக் காலையில் அஸ்தமிக்கின்றது. அப்பொழுது பௌர்ணமி நிலவு.

சூரியன், சந்திரன், கிரகங்கள், நட்சத்திரங்கள் அனைத்தையும் தெய்வீக சக்திகளாக நமது முன்னோர் கருதினர். வருஷப் பிறப்பு, மாதப் பிறப்பு, அமாவாசை, பௌர்ணமி, ஏகாதசி, துவாதசி என்று பல நாட்களில் விரதமிருந்தும், விருந்து கொண்டாடியும் பூஜித்தனர். சந்திரன் பூமியைச் சுற்றும் வட்டத்தில் 27 நட்சத்திரங்களைக் குறிப்பிட்டு, அதற்கு மகத்துவமளித்தனர். சூரியனுடைய பாதையை 12 ராசிகளாக வகுத்து, ஒரு மாதத்துக்கு ஒரு ராசியின் பெயர் சூட்டினர். கிரகங்களின் போக்குகளையும் கணக்கிட்டனர். ஒரு குழந்தை பிறக்கும்பொழுது அதன் வருஷம், திதி, நட்சத்திரம், ராசி, கிரகங்களின் இருப்பிடம் முதலியவற்றைக் குறித்து ஜாதகம் கணித்தனர். அந்த ஜாதகத்தைக் கொண்டு அதன் வருங்காலத்தை நிர்ணயிக்கக் கூடும் என்று எண்ணிச் சோதிட சாஸ்திரத்தை எழுதினர்.

பூமியின் சீதோஷ்ண நிலையிலும், மேகங்கள் உண்டாகிப் பரந்து மழை பொழிவதிலும், கடல் பொங்குவதிலும், சூரியனுக்குப் பேரளவிலும், சந்திரனுக்குச் சிறிதளவிலும் செல்வாக்கு இருக்கின்றது. மற்றக் கிரகங்களுக்கோ, நட்சத்திரங்களுக்கோ எவ்வித சக்தியும் இருப்பதாக நம்புவதற்கு இக்காலத்திய வான சாஸ்திரம் இடம் கொடுக்கவில்லை.




"அப்பா, நீங்க ஆபீஸ் போவதற்கு ஷர்ட், கோட் எல்லாம் எடுத்து வைச் சாச்சு. பூட்ஸுக்குக்கூடப் பாலிஷ் போட்டுட்டேன். சாப்பாட்டுக்கு எல்லாம் தயாரா வைச்சிருக்கேன்."


"பேஷ்...பேஷ்..."

"நீங்க செய்ய வேண்டிய ஒரே காரியம் என் பிராகிரஸ் ரிப்போர்ட்டிலே கையெழுத்துப் போட வேண்டியது தான்!"

"A" என்ற எழுத்தின் பின்னால் எந்த எழுத்து வருகிறது?"

"மற்ற எல்லா எழுத்துக்களுமே வரிசையாக அதன் பின்னால்தான் வருகின்றன."






"அந்தப் போர்டைப் படித்தாயா? இந்த நிலத்தில் மீன் பிடித்தால் தண்டிக்கப்படுவார்கள் என்று போட்டிருக்கு அதிலே!"


"நான் நிலத்தில் மீன் பிடிக்கவில்லையே! நீரில்தானே பிடிக்கிறேன்!"

சிரிக்கச் சிரிக்க..

சாமா




"அடடே! என்னைவிட என் பேரன் இருபது பவுண்டு நிறை கூட இருக்கிறானே!"



"நான் ரேடியோவில் பாட ஆரம்பித்ததிலிருந்து 1,00,000 ரேடியோ செட்டுகள் விற்பனை ஆகி இருக்கின்றனவாம்."

"இருக்கலாம். நாங்க எங்க ரேடியோவை வித்தோம். அதே போல 99,999 பேரும் தங்கள் ரேடியோக்களை வித்திருக்கலாம்!"



ஜூ - மந்திரக்காளி, கோப்பையே ஓடிவா!

நண்பர்களைப் பிரமிக்க வைக்க விரும்புகிறீர்களா? இதோ ஓர் 'ஒண்டர்ஃபுல்' மாஜிக் சொல்கிறேன்.

என்ன மாஜிக்? எல்லார் எதிரிலும் ஒரு தொப்பிக்குள் ஒரு 'கப்'பை வைக்கிறீர்கள். பிறகு அதை ஒரு கர்சீப்பால் மூடிக் கோப்பையை வெளியே எடுத்து மேஜையின் மீது வைக்கிறீர்கள். ஒரு மந்திரம் போட்டதும் கோப்பை திரும்பத் தண்ணீருடன் தொப்பிக்குள்ளேயே வந்து விடுகிறது.

எப்படிச் செய்வது?

தொப்பி, கர்சீப், கோப்பை இவை தவிர இந்த மாஜிக்கைச் செய்ய இன்னும் ஒரு பொருளும் வேண்டும். கோப்பையை ஒரு கெட்டியான அட்டையில் கவிழ்த்து விளிம்பைச் சுற்றிப் பென்சிலால் வட்டம் வரைந்து அட்டையை வெட்டி வைத்துக் கொள்ள வேண்டும். அந்த வட்ட அட்டை கோப்பையின் வாயளவுக்குச் சரியாக இருக்க வேண்டியது ரொம்ப முக்கியம்.

இந்த வட்ட அட்டையைத் தொப்பிக்குள் முன்னதாகவே ''சைட்'' ஓரமாகப் பசையால் இலேசாக எடுக்கிறாற் போல், ஒட்டி வைத்துக் கொள்ளுங்கள். அட்டையும் தொப்பியின் நிறமாக இருந்தால் தெரியவே தெரியாது.

இனி மாஜிக்கை ஆரம்பிக்கலாம்.

1. கோப்பையில் பாதி அளவு தண்ணீரை நிரப்பி எல்லோரிடமும் காட்ட வேண்டும். பிறகு அதை அலுங்காமல் தொப்பிக்குள் வையுங்கள். இடது கையினால் அதைச் சரியாக வைக்கிறாற்போலப் பாவனை செய்து கொண்டே வலக் கையில் கர்ச்சீப்பை எடுத்துத் தோழர்களிடம் உதறிக் காட்டுங்கள். அதே சமயம் அவர்கள் கர்ச்சீப்பைப் பார்த்துக் கொண்டிருக்கும்போதே இடக் கையால் தொப்பிக்குள் ஒட்டியிருக்கும் வட்ட அட்டையை எடுத்துக் கோப்பையை அதனால் மூடிவிடுங்கள்.

2. அடுத்ததாகத் தொப்பியைக் கர்ச்சீப்பால் மூடுங்கள். நண்பர்களிடம் பேசிக் கொண்டே கர்ச்சீப்பை அழுத்திப் படத்தில் காட்டியிருக்கிற மாதிரி வட்ட அட்டையை மட்டும் வெளியே எடுத்துக் கொள்ளுங்கள்.

நண்பர்கள் கோப்பையைத்தான் கர்ச்சீப்பால் மூடி நீங்கள் எடுத்திருப்பதாக எண்ணிக் கொள்ளுவார்கள்.

3. கோப்பையுடன் கூடிய தொப்பியை அப்படியே மெதுவாக மேஜையின் மீது அரை அடி உயரம் தூக்கிக் கொண்டு வலக் கையால் 'போலி'க் கோப்பைக் கர்ச்சீப்பை அதன் கீழே கொண்டு வந்து நிறுத்திக் கொண்டு, ''நண்பர்களே, இதோ கீழே கர்ச்சீப்புக்கு அடியில் உள்ள கோப்பை, கர்ச்சீப்பையும் தொப்பியையும் பொத்துக் கொண்டு மந்திரத்தால் தொப்பிக்குள் போகிறது பாருங்கள்'' என்று சொல்லி, 'ஒன்-டூ-த்ரீ' என்று சொல்லுங்கள்.

4. 'த்ரீ' என்கிற போது கர்ச்சீப்பை விட்டு விட்டால் அது விழுந்துவிடும். நண்பர்கள் கோப்பை மறைந்து விட்டது என்று நினைப்பார்கள்.


5. பிறகு நீங்கள் தொப்பிக்குள்ளிருந்து நீர்க் கோப்பையை எடுத்துக் காட்டி பிரமிக்க வைக்கலாம்.

எச்சரிக்கை: தொப்பியை எடுக்கும்போதும் வைக்கும்போதும் நீங்கள் கை அசையாமல் பார்த்துக் கொள்ளுங்கள். அசைந்தால் தண்ணீர் சிந்திக் காட்டிக் கொடுத்துவிடும்.

— ஆர். விஜயா









780. ஃபரோரகாஸ் (Phororhacos) என்பது பறக்க முடியாத பறவை—50 அடி நீளமுள்ள ஊர்ந்து செல்லும் இனம்—சரித்திர காலத்துக்கு முற்பட்ட குகையில் வாழ்ந்த கரடி — இவைகளில் எது சரி?

781. ஜீனி கூகுலாட்டி (Genii Cucullotti) என்றால் என்ன?

782. எவரெஸ்ட் சிகரம் எந்த இரு தேசங்களுக்கிடையே உள்ளது?

783. கோவ்லூன் (Kowloon) எங்குள்ளது?

784. ஓயஸிஸ் என்றால் என்ன?

785. மிகச் சிறந்த நல் முத்துச் சிப்பிகள் எங்கு காணப்படுகின்றன?

786. சரித்திர காலத்துக்கு முற்பட்ட, உலகம் தோன்றியபோது வாழ்ந்த, பிராண்டாசரஸ் என்ற மிருகத்தின் உணவு — மாமிசம், தாவரம் — இரண்டுமே. இவைகளில் எது சரி.

787. உயிரோடு எரிக்கப்பட்ட விடுதலை வீராங்கனையாக பிரெஞ்சுக்காரர்களால் புகழப்படும் ஜோன் ஆஃப் ஆர்க் எதிரிகளின் தாக்குதலிலிருந்து காத்தது எந்த நகரத்தை?

788. கடலில் மீன் பிடிப்பவர்கள் அதற்கு உதவும் சாதனமாக ஒரு எலெக்ட்ரானிக் அமைப்பைப் பயன்படுத்துகின்றனர். அதன் பெயர் என்ன?

789. ஷெர்ப்பாக்கள் என்றால் யார், அல்லது என்ன?

790. பிரிட்டனை ரோமானியர்கள் எத்தனை ஆண்டுகள் அரசாண்டார்கள்?

791. நீராவி யந்திரத்தின் தந்தை என்று யாரைக் குறிப்பிடுகிறார்கள்?

792. நாம் நவரத்தினங்கள் என்கிறோம். ஆனால் மேல்நாட்டவர் நான்கு வகைக் கற்களைத்தான் விலை மதிப்பற்ற ரத்தினங்கள் என்கிறார்கள். மற்றவைகளை இவைகளுக்கு அடுத்தபடியாகவே மதிக்கிறார்கள். அந்த நாலு கற்கள் எவை?

793. செங்குத்தான, படுக்கையான கோணங்களை அளவிடுவதற்குப் (ஸர்வே) பயன்படும் டெலஸ்கோப்பிற்கு என்ன பெயர்?

794. னெல் (Knell) என்றால் சிறிய மரக் கட்டை, பிரார்த்தனைக்குப் பயன்படும் இருக்கை, மாதா கோயிலின் ஒரு பகுதி, மாதா கோயில் மணி அடிப்பதில் ஒரு விதம் — இவைகளில் எது சரி?

795. ஃபேசட் (Facet) என்றால் விவரமான, மறு பிரதி, பல பக்கங்களை உடைய ஒரு பொருளின் ஒரு பக்கம், குழந்தையின் முகம்—இவைகளில் எதுசரி?

796. எவரெஸ்ட் சிகரத்தில் நடந்து ஏறியது பற்றி உங்களுக்குத் தெரியும். முதன் முதலில் விமானத்தில் கடந்தது எந்த ஆண்டு என்று தெரியுமா?

797. நார்மானியர்கள் ஆண்ட இங்லாந்தில் அன்றாடம் எழுதுவதற்கு மக்கள் எதைப் பயன்படுத்தினார்கள் தெரியுமா?

798. பிரபல நாடகாசிரியரான ஷேக்ஸ்பியர் 1594ம் ஆண்டில் அங்கத்தினராக இருந்த நாடகக் கழகத்தின் பெயர் தெரியுமா?

799. நியூஸிலாந்தில் உள்ள மிகப் பெரிய நகரத்தின் பெயர் என்ன?

800. தாவர இனத்திலேயே ஒரு மரம் மிக மிக வேகமாக வளரக் கூடியதாகக் கருதப்படுகிறது. அது எந்த மரம்?

801. ஹைபோதெர்மியா என்றால் என்ன?


802. கிட்டர் மினிஸ்டர் (இங்கிலாந்தில் உள்ளது) நகரம் எதற்குப் புகழ் பெற்றது?

780. பறக்க முடியாத பறவை. 781. முகமூடி அணிந்த தேவதைகள். ரோமானியர்கள் பிரிட்டனில் ஆதிக்கம் செலுத்தியபோது வீட்டுக் கடவுளாகக் கருதப்பட்டது. 782. திபெத்துக்கும் நேபாளத்துக்குமிடையே. 783. ஹாங்காங்கில். 784. பாலைவனத்திடையே காணப்படும் சோலை. 785. உஷ்ண மண்டலக் கடல்களில். 786. தாவரத்தை உண்ட ப்ரோன்டோசரஸ்தான் பிராண்டாசரஸ். 787. ஆர்லியன்ஸ் நகரம். 788. எக்கோ ஸவுண்டர். 789. இமயமலை அடிவாரத்தில் நேபாளப் பகுதியில் வாழும் ஒரு இன மக்கள். மலை ஏறுவோருக்கு உதவுவது இவர்கள் வழக்கம். 790. 350 ஆண்டுகள். 791. சிக்னர் டர்வேதிக் என்பவரை. 792. டையமண்டு (வைரம்) ரூபி (கெம்பு) சஃபயர் (நீலக்கல்) எமரால்டு (மரகதம்). 793. தியோடலைட் (Theodolite) டெலஸ்கோப் என்று பெயர். 794. கடைசியிலுள்ளது. சமக்கடன் நடத்தும்போதோ ஒருவரின் மரணத்தை அறிவிக்கவோ பெரிய அழிவைத் தெரிவிக்கவோ ஒலிக்கப்படும் மணியோசைக்கு இப்பெயர். 795. பல பக்கங்களையுடைய பொருளின் ஒரு பக்கம். பட்டை தீர்ந்த வைரத்தின் பல பக்கங்களில் ஒன்று. 796. 1933ல். 797. இறகு பேனாவையும், மிக்க மரத்திலிருந்து எடுக்கப்பட்ட மெல்லிய உரியையும். 798. தி லார்ட் சேம்பர்லின்ஸ் கம்பெனி என்ற அமைப்பில். 799. ஆக்லாண்டு. 800. யூகலிப்டஸ் மரம். 801. அறுவை சிகிச்சையின்போது உடலின் உஷ்ண நிலையைச் செயற்கை முறையில் குறைப்பதற்கு இப்பெயர். 802. கம்பளங்களுக்கு (கார்பெட்ஸ்).



'கோகுலம்'த்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில், பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக ஆர். அனந்தநாராயணனால் அச்சிட்டு வெளியிடப்பட்டது. ● ஆசிரியர்: சதாசிவம்


பண்டைய
நாகரீகத்தின்
மறுமலர்ச்சி
அன்றைய குஜராத்தி மரபினைப்
பின்பற்றி சேலை அணியும் பாணி
இன்று மீண்டும் மங்கையரிடையே
உலவத் தொடங்கி உள்ளது. அதுவும்
அணிகதிடும் சேலை மபத்லாலின்
'மெஃப்ரின்' 100% பாலியெஸ்டர்
சேலையாக இருக்குமே எனில், அழகு
முழுமை பெற்று முறுவலிக்கிறது!
'மெஃப்ரின்' பாலியெஸ்டர் சேலைகள்
பண்டைய கற்பனைகளுக்கு, நவீன
ஒலியோடு கூடிய வண்ணம், வடிவம்
மற்றும் நெசவின் நேர்த்தியை
கலந்திழைத்து, கிளர்ச்சியூட்டும்
மறுமலர்ச்சியை அளிக்கின்றன!
மபத்லால் க்ரூப் அளிக்கும்
நேர்த்தியான துணிமணிகள்
மெஃப்ரின்
பாலியெஸ்டர் சேலைகள் மற்றும்
உடுப்புத் துணிகள்


ராசுவும் வாசுவும்...
வேட்டையாடிய படலம்
சுட்டிப் பயல்கள் பறந்தனராம்
ஜெட் விமானத்திலே... ஆப்பிரிக்கா
வரவேற்றாரும் வேடர்தலைவன்,
குறை வைக்காமல் உபசரித்தான்
வேட்டைக் கூட்டம்
வெகு ஜோராய்
காட்டு வழியில்
கிளம்பியதே.
குரங்குகளோ குரங்குகள்
கூடிப் பழமரங்களிலே
கூச்சலிட்டனவே
வாசுவைக் குரங்குகள் திடீரென
வட்டமிட்டன; பழங்களையும்
சட்டென மறந்துவிட்டனவே.
பரவசமூட்டி யாவரையும்
பழரசமுடனே கவருபவை
பாப்பின்ஸ் மிட்டாய்களே.
சொக்கும் இன்பம் சொட்டும்
இனிமை, பலே ஜோர்
பார்லே பாப்பின்ஸ்
பழரச மிட்டாய்கள்
PARLE POPPINS
5 பழரசச் சுவைகைகள்—
ராஸ்ப்பெர்ரி, அன்னாசி,
எலுமிச்சை, ஆரஞ்சு,
சாத்துக்குடி ஒவ்வொரு
சுருளிலும் 13 மிட்டாய் வில்லைகள்.